# அன்பு மக்களே

TAMIL CATHOLIC MONTHLY PUBLICATION · OCTOBER 2016 | YEAR 21 | VOL 227

தமிழ் கத்தோலிக்க மாதாந்த வெளியீடு - ஐப்பசி 2016, ஒளி 21, கதிர் 227

B4
033






மனிதகுல மேம்பாட்டுக்காக உழைத்த புனித அன்னை திரேசா அவர்களின் வாழ்க்கைச் சரித்திரம் நிறைந்த கட்டுரைகளைத் தாங்கி வந்த அன்புமக்களே புத்தகத்தை வெளியிட்டு வைத்து உரையாற்றிய கலாநிதி அருட்தந்தை குருதீபன் அந்தோனிப்பிள்ளை தோமாஸ் அ.ம.தி அவர்கள் தமிழ் கத்தோலிக்க மக்கள் மத்தியில் கடந்த இருபத்திரண்டு வருடங்கள் வெளி-வரும் இந்த புத்தகம் இருநூற்றி ஐம்பது தடவைகளுக்கு மேல் ஒவ்வொரு முறையும் இரண்டாயிரத்திற்கும் ஐந்தாயிரத்திற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையில் வெளிவரும் போது இதனுடைய பொருளியல் ஆதாரம் போதாமல் இருந்தும் பல தடைவைகள் இதனுடைய ஆசிரியரால் மட்டும் செலவு செய்து மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டு வருவது ஆசியரின் விசுவாசமும் இறைவ-னின் துணையும் தான் இன்று வரையும் இந்த சஞ்சிகை வெளிவருவதற்குக் காரணமாகும். ஆகவே புனித அன்னை திரேசாவின் துணையும் தொடரும் என்ற விசுவாசத்துடன் நன்றி கூறி இப்புத்தகத்தை வெளியிடுகிறேன். **அத்தோடு இருபத்திரெண்டாவது ஆண்டை நிறைவு செய்து கொண்டிருக்கும் அன்பு மக்களே என்ற சஞ்சிகை ஆசிரியர் மறைபணி டேவிட் தோமஸ் மற்றும் குழுவினர் அனைவரையும் பாராட்டுகிறேன் வாழ்த்துகிறேன்.**

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக. அன்னை மரியாளின் பரிந்துரை உங்களுக்க நிறைவாக கிடைக்க செபித்து மண்டாடுக-றேன்.

கலாநிதி அருட்தந்தை குருதீபன் அந்தோனிப்பிள்ளை தோமஸ் அ.ம.தி அவர்கள் 1992ம் ஆண்டு தொடக்கம் இலண்டன் ஒன்ராரியோவில் நான்கு வருடங்களும் கனடா நோவஸ்க்கோசியாவில் இருபது வருடங்கள் பூர்வீக மக்கள் மத்தியில் பணிபுரிந்து இப்போது எட்மன் அல்பட்டாவுக்கு சென்றுள்ளார்.

## ஸ்தாபிதம்

ஆனிமாதம் 1995

## முகவரி

2623 Eglinton Ave EastUnit # 2nd floor
Scarborough. On. M1K 2S5

E-mail
Tamilcatholicpublication@gmail.com

தொலை பேசி (647) 348 - 5100
தொலைநகல் (647) 348 - 5100

தயாரிப்பு + வெளியீடு
தமிழ்க் கத்தோலிக்க வெளியீட்டகம்..



ஆசிரியர் குழு
திரு தோமாஸ் டேவிட்
அருட் தந்தை ஜெயசீலன் பிரான்சீஸ்
அருட் தந்தை யேசுறாஜன் மரியதாஸ்
சகோதரி மரினா அந்தோனிப்பிள்ளை

ஆலோசனைக் குழு
அருட் தந்தை அந்தோனிப்பிள்ளை தோமாஸ்
அருட் தந்தை ஹமலதாசன் அன்ரனி
பண்டிதர் அலெக்ஸ்சாந்தர் செல்வராசா
அருட் தந்தை வார்கிஸ் சகாயறாஜா

தொழில் நுட்ப உதவி
திரு குணரெட்னம் நாகமுத்து
திருமதி யூலிற் வசந்தா குணரெட்னம்

விநியோகஸ்த்தர்கள்
கனடாத் தமிழ் கத்தோலிக்க தன்னார்வத் தொண்டர்கள்.


## கிடைக்கும் இடங்கள்

றொறொன்ரோவில்
புனித அந்தோனியார் தேவாலயம்
லூர்துமாதா தேவாலயம்

ஸ்காபரோ
புனித மரிய கொறற்றி தேவாலயம்
தோமாஸ்மோர் தேவாலயம்
பர்ணபாஸ் தேவாலயம்

ஜேன்&பிஞ்
புனித ஒகஸ்றின் தேவாலயம்

மிஸிசாக்காவில்
சிற்றி சென்றர் வியாபார ஸ்தாபணங்களில்

டொன்மில்ஸ்
புனித 23ம் அருளப்பர் தேவாலயம்

தமிழ் கத்தோலிக்க புதுவாழ்வுக் குழு

தமிழ் மொழிகற்கும் வகுப்புகள்
மெக்கா சிற்றி வர்த்தக ஸ்தாபனங்கள்

## ஆசிரியர் உரை
## மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம்



அகில உலகிலும் காலம் காலமாக கத்தோலிக்க மறையின் மையமான விசுவாசக் கூறுகளாக இருப்பவை திருவருட்சாதனங்கள் மரியா பக்தி. புனிதர்கள் வணக்கம் என்று கூறலாம்.

இந்த மாதம் செபமாலைமாதம், மாதாவின் மாதம், மக்கள் மாதாவின் மகிமையை மனம் திறந்து பேசும் மாதம், செபமாலை திருவிழாக்கள் உலகம் முழுதும் நடைபெறும் மாதம், இம்மாத இதழில் மாதாவின் மகிமையை விவாதிப்பதிலும் விளக்கம் பெறுவதிலும் எமது அன்புமக்களே பங்கெடுப்பது மிகவும் முக்கியமாக நாம் கருதுகிறோம்.

அன்னை மரியா பற்றி எண்ணிலடங்கா நூல்கள் எல்லா மொழிகளிலும் எழுதப்பட்டுள்ளன. மரியன்னையின் புகழை எழுதினால் எழுத்தில் அடங்காது. பாடினால் அது பாட்டிலடங்காது. காரணம் மரியாவின் புகழ் எழுத்துக்கும் இலக்கியத்திற்கும். கவிதைக்கும் காவியத்திற்கும் அப்பாற்பட்டதுதான் விசுவாசம் அது அதிகமாக இருக்குமிடத்தில் மரியாவை ஏற்றுக் கொள்ள அஞ்ச வேண்டாம் என்பதுதான் கத்தோலிக்க மக்களின் மரியா மீதான அன்பு. அண்டி வருவோரின் துயர் துடைப்பவராகவும் உள்ளார். சுருங்கக் கூறின் மரியா இறைவனின் அன்னை சொற் கடந்த ஜோதி.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் எமது **அன்பிற்கும் மதிப்பிற்குரிய அருட்தந்தை லீனஸ் சொய்சா ஆன்மீகக் குரு தமிழ் திருப்பயணிகளுக்கான பங்குத்தந்தை பிரான்ஸ். மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம் என்கின்ற கட்டுரைத் தொகுப்பை கலாநிதி அருட்தந்தை ஜெறின் டிறோஸ் அடிகள் அவர்களின் துணையுடன் எமது "அன்புமக்களே" மாதாந்த சஞ்சிகையில் மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம், மரியாவை ஆண்டவரின் தாய் என அழைப்போம்,** அன்னை மரியாவைப் பற்றி தாம் சொல்லவரும் படிப்பினைகளின் கருத்தை எளிமையாகவும். அதேநேரத்தில் விவிலியம். மற்றும் திருச்சபை ஆசிரியர்களின் ஆதாரங்களுடனும் அணி செய்து விவாதித்து விளக்கியுள்ள விதம் பாராட்டிற் குரியதாகும்.

இந்த நூல் தமிழ் பேசும் கிறிஸ்த்தவ திருச்சபை மக்களுக்கு காலத்திற்கேற்ப கருத்துக்களஞ்சியமாக கிடைத்ததாக நினைத்து மனம் மகிழ்கின்றேன். இப்புத்தகத்தை ஒவ்வொரு பொது நிலையினரும் விசுவாசம் கொண்டவர்களும் மரியாவின் ஆழ்ந்த அன்பின் விசுவாசத்துடன் வாசித்து இறைவனைப் போற்றி நன்றி கூறுவதுடன் அயலவர்களுக்கு பகிர்ந்து பயன்பெறுவோம்.

இந்த நூலை அன்னையின் பக்தர்கள் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்துப் பயனடையவும். கத்தோலிக்க விசுவாசத்தின் உண்மையையும் பகிர்தல் என்னும் மேன்மையையும் உணர்ந்து நம்பிக்கையில் நிலைத்து வாழ வாழ்த்துகிறேன். அன்புமக்களே சஞ்சிகையின் வாசகர்களுக்கும் இன்நூல் வெளியாவதற்கு ஆர்வம் காட்டியவர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் மரியன்னையின் ஆசீர் என்றும் நிறைவாகக் கிடைப்பதாக.

**நிர்வாக ஆசிரியர்.**
**மறைபணி தோமாஸ் டேவிட்**

**ஆதரவு**
**கனடாத் தமிழ் கத்தோலிக்க சங்கம்.**

# மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம் (மத்:1 -20b)



புனித லூர்தன்னை திருத்தலம் பிரான்ஸ்



கத்தோலிக்க திருச்சபையில் இயேசுவுக்கு அடுத்த படியாக மணிசூட்டப்படுபவர் அன்னை மரியாள். கடவுளின் தவப்புதல்வியாக. இயேசுவின் அன்பு அம்மாவாக.. உலக மக்களின் பாசத்தாயாக இருப்பவர் அன்னை மரியாவே! மகனே இவர்களுக்கு உதவிக்கரம் நீட்டு என்று கானாவூர் திருமணத்தில் மகனை அழைத்த அன்னை இன்று நமக்காக இறைவனிடம் கையேந்தி நிற்கி றார்கள். இதோ உன் தாய் என்று யோவானிடம் சொன்ன ஆண்டவர் அவரை நமக்கும் தாயாக தந்திருக்கிறார். இதனால் தான் லூர்து பற்றிமா, வேளாங்கன்னி. குவாட்டலூப்பே. மஜோகோரி. மடுமாதா போன்ற புனித தலங்களுக்கு ஏராளமான மக்கள் கூட்டம் கூட்டமாகச் சென்று கொண்டிருக்கி றார்கள்.

இந்த அன்னையைப் பற்றி ஏராளமான புத்தகங்கள். பாடல்கள். கவிதைத் தொகுப்புக்கள் வந்திருப்பதை நாம் அறிவோம். அதே வேளையிலே பிரிவினை சபையைச் சேர்ந்த சகோதர சகோதரிகள்.போதகர்கள் அன்னை மரியாவைப் பற்றி தவறு தவறாக எழுதிக் குவித்தாலும் குறை கூறினாலும் அன்னை மரியாளின் புகழ் மங்கி விடவும் இல்லை. மறைந்து விடவும் இல்லை என்பது உலகறிந்த உண்மை. கோடிக் கணக்காண மக்கள் அன்னையின் திருத்தலங்களை நாடித் தேடி ஓடிச் செல்வதைப் பார்க்கும் போது அன்னை மீது மக்கள் வைத்துள்ள அன்பும் பாசமும் நம்பிக்கையும் நம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்துகின்றது.



மருத மடுமாதா திருத்தலம் - இலங்கை

தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்ட ஒருவர் அன்னை மரியாவை எவ்வாறு அழைப்பார் என்பதற்கு சிறந்த ஒரு எடுத்துக்காட்டு எலிசபேத் அம்மாள் ஆவார். இவர் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவுடன் **மரியாவை ஆண்டவரின் தாய் என அழைக்கின்றார்.**அதே போல தூய ஆவியாரால் ஆட்கொள்ளப்பட்ட நாம் அன்னை **மரியாவை எப்படி அழைப்போம்..ஆண்டவரின் தாய் என்று தான் அழைப்போம்.**

இப்பொழுது அன்னை மரியாவை குறை சொல்பவர்களையும் தப்புப் தப்பாக பேசுகிறவர்களையும் எந்த ஆவி ஆட்கொண்டு இருக்கிறது என்பதை நீங்களே அறிந்திருப்பீர்கள் நன்றாகப் புரிந்திருப்பீர்கள். நிறைவாக அன்னை மரியாளின் அர்ப்பணம் சீடத்துவம் விசுவாசம். தாழ்ச்சி, பொறுமை, தாய்மை, பரிந்துரை, செபித்தல்.தியானித்தல். இறைவார்த்தை. நற்செய்தி அறிவித்தல் போன்ற பல் வேறு மதிப்பீடுகளை உண்மைத் தன்மையை உலகறியச் செய்ய எடுக்கும் இந்த நல்ல பயனுள்ள முயற்சியை முழு மூச்சாக முன்னேடுக்கின்ற **22வது ஆண்டை நிறைவு செய்து கொண்டிருக்கும் "அன்புமக்களே" என்ற மாதாந்த சஞ்சிகை** தமிழ் கத்தோலிக்க வெளியீட்டகத்தின் **ஆசிரியர் மறைபணி டேவிட் தோமாஸ் மற்றும் குழுவினர் அனைவரையும் பாராட்டுகின்றேன். வாழ்த்துகின்றேன்.** ஆண்டவர் உங்களை ஆசீர்வாதிப்பராக. அன்னை மரியாளின் பரிந்துரை உங்களுக்கு நிறைவாகக் கிடைக்க செபித்து மன்றாடி நிற்கின்றேன்.

இயேசுவுக்கே புகழ். மரியே வாழ்க.

அருட்தந்தை லீனஸ் சொய்சா (அ.ம.தி)
தமிழ் திருப்பயணிகளுக்கான ஆன்மீகக் குரு
புனித லூர்தன்னை திருத்தலம், பிரான்ஸ்
தொலைபேசி இலக்கம்: 011 33 781 899192

17.09.2016

# மரியாளுக்கு மரியாதையா?

ஒரு தடவை படித்து
பாருங்கள் உண்மை புரியும்



# கிறிஸ்துவை அறியவேண்டுமா?
# அன்னை மரியாளிடம் செல்லுங்கள்.

கிறிஸ்துவை அறியவேண்டுமா? அன்னை மரியாளிடம் செல்லுங்கள். (6ம்பவுல்). காரணம்: வார்த்தையான இறைவனைதன் உதிரத்தில் தாங்கிய கன்னிமரியாளை விட இயேசுவைப்பற்றி எடுத்துச் சொல்ல சிறந்தவர் யாருமே இருக்கமுடியாது. மரியாள் என்னும் உயிருள்ள நற்கருணைப் பேழையில் தான் கடவுள்தன் மகனை உள்ளடக்கி னார். அவரது மாசற்ற இதயம்தான், முதன் முதலில் இயேசுவைத் தாங்கி நின்ற கதிர்ப்பாத்திரம். மரியாள் கிறிஸ்துவின் மகிமையை மறைக்கி றவர் அல்ல. மாறாக அதை வெளிச்சத்துக்கு கொண்டு வருகிறவர். கானாவூரில் கிறிஸ் துவின் மாட்சி வெளிப்படவும் சீடர்கள் அவரில் விசுவாசம் கொள்ளவும் அன்னை மரியா மூலகாரணமாகிறார்.

அன்னை மரியா பரம தந்தையின் அன்பு மகளாகவும் தூய ஆவியின் மணவாட்டி யாகவும் யேசுக்கிறிஸ்துவின் அன்புத் தாயாகவும் நற்செய்தி நூலின் வழியாக அறிமுகம் செய்து வைக்கப்படுகிறார். அது மட்டுமல்ல விசுவாசம், அர்ப்பணம், நற் செய்தியை அறிவித்தல், தாழ்ச்சி, இறை வார்த்தை, செபித்தல், தியானித்தல், சீடத்துவம் போன்ற பல்வேறு மதிப்பீடு களை முழுமையாகக் கடைப்பிடித்த அற் புதப் பெண்ணாகக் காணப்படுகின்றார்.

அத்தோடு குறிப்பாக, இக்காலகட்டத்திலே பல்வேறு பிரச்சனைகளில் தங்கள் வாழ்க்கைப் போராட்டத்தை நடத்திக் கொண்டு வரும் மக்களுக்கு நற்செய்தி மதிப்பீடுகளை மிகச்சிறப்பாக வாழ்ந்த அன்னை மரியா, ஓர் மாபெரும் எடுத்துக்காட்டு.

அந்த மரபிலேயே அன்று முதல் இன்று வரை சீரும் சிறப்பும் பெற்று விளங்கு பவர், அன்னை மரியா. அரிய உலகிலே படித்தவர், பாமரர் என்ற வேறுபாடின்றி கத்தோலிக்க மக்களாலும், கத்தோலிக்கர் அல்லாதவர்களாலும் பக்தி பரவசத்துடன் போற்றப்படுபவர், அன்னை மரியா, அண்டினோரின் துயர் துடைப்பவளும் அன்னை மரியா, திருச்சபையின் பாரம்பரியத்தையும் வரலாற்றையும் சரிவர அறியாதவர்கள் குழப்புகிறார்கள். ஒரு தாய்க்கும் சேய்க்கும் உள்ள பாசத்தை நிரூபித்துக்காட்டவோ, விளக்கிச்சொல்லவோ விவாதங்கள் தேவையில்லை.

இதே பக்தியும் பாசமும் தான் நாம் அன்னை மரியா மீது கொண்டுள்ளோம். ஏனென்றால் நம்பிக்கை கொண்டிருப் போருக்கு எவ்வித விளக்கமோ, விவாதமோ தேவையில்லை. அவை இல்லாமலே அவர்களை நம்பமுடியும்.

அதேபோல நம்பிக்கையில்லாதவர்களுக்கு எவ்விதமான விளக்கமும் விவாதமும் அவ்வளவாகப் பயன்தரப்போவதில்லை. ஏனென்றால் நம்பக்கூடாது என்று ஏற்க னவே அவர்கள் தீர்மானித்து விட்டார்கள்.

திருவிவிலியத்தில்..........

அருள் மிகப்பெற்றவளே வாழ்க! - **இது அவர்களுக்குத் தெரியாதா?**

ஆண்டவர் உம்முடனே - **இது அவர்களுக்குத் தெரியாதா?**

ஆண்டவருடைய தாய் என்னிடம் வர நான் என்ன தவம் செய்தேன் - **இது அவர்களுக்குத் தெரியாதா?**

எல்லாத் தலை முறைகளையும் என் னைப் பேறுடையாள் எனப் போற்றுமே - **இது அவர்களுக்குத் தெரியாதா?**

மரியாவை ஏற்றுக்கொள்ள அஞ்ச வேண்டாம் - **இது அவர்களுக்குத் தெரியாதா?**

இதோ உன் மகள், இதோ உன் தாய் - **இது அவர்களுக்குத் தெரியாதா?.......**

இவைகளெல்லாம் உள்நோக்கத்தோடு திட்டமிட்டு இருட்டடிப்புச் செய்யப்பட்ட சதிகள். இதைப்பற்றிப் பேசமாட்டார்கள், வாய்திறக்க மாட்டார்கள். ஏனென்றால் அவர்களின் ஒரே நோக்கம் மரியாவை குறைசொல்வது மட்டுமே.

ஆதலால் மற்றக் கிறிஸ்தவசபைகள், மற்றும் பெந்தக்கோஸ்து குருக்கள் சந்தேகங்களையும் கேள்விகளையும் எழுப்பும்போது, அவர்களுக்கு தெளிவான பதிலை நாம் கொடுக்க வேண்டும்.

நம்மீது அவர்கள் கொண்டுள்ள தவறான கருத்துகள் - தொடுக்கப்படும் வினாக்கள், சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் தரக் கூடியவகையில், மிகவும் ஆழமான விவிலிய ஆதாரங்களுடன் விளக்குகின்றார் கலாநிதி அருட்தந்தை லெறின் டி றோஸ் இறைவார்த்தைகளை தவறாகப் போதிக்கிறவர்களுக்கு நற் செய்தியின் ஒளியில் அன்னை மரியாவை எளிய நடை முறையிலே புரிய, நமக்குக் கிடைத்த மாபெரும் பொக்கிஷம் தான் மரியாவுக்கு மரியாதையா?

**கலாநிதி அருட்தந்தை லெறின் டி றோஸ் குழப்புகின்ற பிரிந்த சகோதரர்களுக்கும், குழம்பிப்போயிருக்கின்ற கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கும் தெள்ளத் தெளிவாகப் புரியும்படி, எளிய நடையில் விவிலிய த்தின் அடிப்படையில் இரத்தின சுருக்கமாக எழுதியுள்ளார்கள். மரியாவுக்கு மரியாதை.**

**கலாநிதி அருட்தந்தை லெறின் டி றோஸ் அவர்களுக்கு எனது நல்வாழ்த்துக்களை யும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.** இது காலத் தின் கட்டாய தேவைக்கு மிகவும் அவசியமான ஒரு தலை சிறந்தநூல். மக்கள் இதனைக் கண்டிப்பாகப் படித்து பயன்பெற வேண்டு மென்று விரும்புகிறேன். ஆசிரியரின் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.



## ஒரு விவிலியப்பார்வை திருச்சபையில் அன்னையின் சிறப்பு

தாய்த் திருச்சபையில் அன்னை மரியாளுக்கு என்று ஒரு தனி இடம் உண்டு. லூர்து மாதா, பாத்திமா மாதா, சகாய மாதா, ஆரோக்கிய மாதா, மடுமாதா போன்ற எண்ணற்ற திருப்பெயர்கள் அவருக்கு மட்டும் தான் உண்டு. இயேசுவுக்கு அடுத்து, அதிகமான திருவிழாக்களும் அவருக்குத்தான். ஏறக்குறைய இயேசுவுக்கு என்னென்ன திருவிழாக்கள் உண்டோ, அவைகள் எல்லாம் மாதாவுக்கும் உண்டு. அதிகமான திருக்காட்சிகள் கொடுத்திருப்பவரும் அவரே. அதிகமான திருத்தலங்கள் இருப்பதும் அவருக்கே.

தாய்த் திருச்சபையானது, அவரை இயேசுவுக்கு அடுத்த நிலையில் வைத்து அழகு பார்க்கிறது. அவரைப் புனிதர்களில் முதன்மையானவராகவும், சீடத்துவ வாழ்க்கையின் இலக்கண மாகவும், விசுவாசிகளின் மாதிரியாகவும் அடையாளம் காட்டுகிறது. அவரை **இயேசுவின் தாய், மீட்பரின் தாய், ஆண்டவரின் தாய், திருச்சபையின் தாய், மனுக்குலத்தின் தாய்** என்று அழைத்து மகிழ்கின்றது. வாரத்தில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாதா நாள். குறிப்பாக, முதல் சனிக்கிழமை அவருக்கே உரியது. அது மட்டுமா? வருடத்தில் இரண்டு மாதங் கள், மே மற்றும் அக்டோபர், அவருக்கென்றே ஒதுக்கப்பட்டுள் ளன. ஒவ்வொரு மாதமும் ஏதாவது ஒரு திருநாள் மாதாவுக்கு இருக்கிறது. வருடமே மாதாவின் திருவிழாவோடுதான் ஆரம்பிக்கிறது: ஜனவரி 1, மரியாள் கடவுளின் தாய், பெப்ரவரி 11, லூர்து மாதா திருவிழா, மார்ச் 25 கபிரியேல் தூதர் மங்கள வார்த்தை சொன்ன திருநாள், ஏப்ரல் 26 நல்லாலோசனை மாதா திருநாள், மே 13 பாத்திமா மாதா திருநாள், மே 31 மினவின மாதா திருநாள், ஜீன் 25 அமைதி அன்னை திருவிழா, ஜீலை 16 கார்மேல் மாதா திருவிழா, ஆகஸ்ட் 15 பரலோக மாதா, செப்டம்பர் 8 மாதாவின் பிறந்த நாள், 15 வியாகுல மாதா மற்றும் 24 உபகார மாதா திருவிழாக்கள், அக்டோபர் 7 செபமாலை மாதா, நவம்பர் 21 காணிக்கை மாதா, மற்றும் டிசம்பர் 8 அமலோற்பவ மாதா திருவிழாக்கள். இங்கே ஒரு சில முக்கியமான திருவிழாக்களை மட்டும்தான் நாம் குறிப்பிட்டுள்ளோம். இன்னும் மாதாவின் திருவிழாக்கள் ஏராளம் உண்டு.மேலும், திருச்சபையில் எண்ணற்ற புனிதர்கள் இருந்தாலும், மரியாளைக் குறித்து மட்டும் தான் விசுவாசக் கோட்பாடுகள் உண்டு. அவைகள் மொத்தம் நான்கு. முதலாவதாக, அன்னை மரியாள் என்றும் கன்னிகை (4 ஆம் நூற்றாண்டு புனித அகுஸ்தினார் காலத்திலிருந்தே நம்பப்படுகிறது). இரண்டாவதாக, மரியாள் இறைவனின் தாய் (எபேசு திருச்சங்கம் 431 ஆம் ஆண்டு வரையறுக்கிறது). மூன்றாவதாக, மரியாள் அமல உற்பவி (பாப்பரசர் 9ஆம் பத்தி நாதர் 1854ல் பிரகடனப்படுத்தினார்). நான்காவதாக, மரியாளின் விண்ணேற்றம் (பாப்பரசர் 12ஆம் பத்திநாதர் 1950ல் பிரகடனப்படுத்தினார்).

## மாதா குறித்த கேள்விகளும் பதில்களும்

அன்னை மரியாவுக்கு திருச்சபை கொடுக்கும் முக்கியத்துவமும், முன்னெடுக்கும் பக்தி முயற்சிகளும் ஒரு புறமிருக்க, அவை களைப் பற்றி குறை கூறுவோரின் எண்ணிக்கை என்றுமில்லாத அளவு இன்று அதிகரித்துள்ளது. அவ்வாறு குறை சொல்வோர் வேறு மதத்தைச் சேர்ந்தவர்களோ, அல்லது நமது பரம்பரை எதிரிகளோ அல்லர். மாறாக, முன்னாள் கத்தோலிக்கர்கள். அதுவும் நமது சொந்தங்கள் என்பது தான் வேதனையின் உச்சம். இவைகள் தேவைதானா? மரியாளுக்கு ஏன் மரியாதை? அவளுக்கு ஏன் இவ்வளவு சிறப்பு? ஏன் இந்த ஆர்ப்பாட்டம்? எதற்காக இந்தக் கொண்டாட்டம்? இதன் அடிப்படைதான் என்ன? ஒரு சாதாரண பெண்ணுக்கு இப்படியெல்லாம் சிறப்பு செய்ய வேண்டுமா? இதுதகுமா? கடவுளுக்கே அடுக்குமா? அவர்களின் கூற்றுப்படி, வரலாற்று ரீதியாக பார்க்கும் போது, இயேசுவோடு இணைந்து நற் செய்திப் பணியில் மரியாள் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. இறையியல் அடிப்படையில் பார்க்கும்போது, திருச்சபையின் விசுவாசப் பிரமாணத்தில் மரியாள் இடம்பெறவில்லை. விவிலியத்தை கையிலே எடுத்து வந்து, நமது வீடுகளில் நம்முன் அமர்ந்து, நம்மையும் நமது வழிபாட்டு சிறப்புகளையும் கொண்டாட்ட ங்களையும் கேள்வி கேட்கிறார்கள். கத்தோலிக்கர்கள் விவிலியத்தை வாசிப்பது இல்லை, அதன்படி வாழ்வது இல்லை, விவிலியம் சொல்லுவதற்கு எதிரான காரியங்களை செய்து கொண்டிருக்கிறார்கள் என்று குற்றப்பத்திரிகை வாசிக்கின்றனர். நம்மவர்களின் அறியாமை அவர்களின் ஆதாயமாகவும், முதலீடாகவும் மாற்றப்படுகிறது.





திருச்சபையின் பல்வேறு செயல்களையும் போதனைகளையும் குறித்து அவர்கள் கேள்வி எழுப்பினாலும், அவர்களின் தாக்கு தலுக்கு அதிகம் உள்ளாகுவது மாதா தான். ஒருவருக்கு ஒரு நபரை பிடிக்கும் என்ற ஒரே காரணத்திற்காக, அந்த நபரை வெறுப்பது எந்த ஊர் நியாயம் என்பது நமக்குப் புரியவில்லை. மாதாவுக்குரிய பக்தி முயற்சிகள் எந்த விதத்தில், எந்த அளவு, இவர்களின் விசுவாச வாழ்விற்கு தடையாக உள்ளன என்பதும் நமக்கு புலப்படாத ஒன்றுதான். இவர்களின் வாதங்களை எப்படி எடுத்துக்கொள்வது? "அவர்கள் எதையும் சொல்லிக் கொள்ளட் டும். அதைப்பற்றி எனக்கு கவலையில்லை" என்று "எதையும் பொருட்படுத்தாத" அல்லது "ஒன்றையும் கண்டுகொள்ளாத" மனநிலை நம்மில் ஒரு சிலருக்கு இருக்கலாம். இது நல்ல மனநிலைதான். ஆனால், இது சகிப்புத் தன்மையால் வந்ததா, அல்லது பெருந்தன்மையின் வெளிப்பாடா, அல்லது அறியாமை யால் ஏற்பட்டதா என்பதையும் அலசிப் பார்க்க வேண்டியுள்ளது. "நான் பாரம்பரியமிக்க கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்து, வளர்ந்தவன். என்னை யாரும் அசைக்க முடியாது" என்று மார்பு தட்டிக்கொள்பவர்களும் நம்மிடையே உண்டு. பாவம், இப்படி வீராப்பு பேசியவர்கள் தான், கத்தோலிக்க பாரம்பரியத்தில் ஊறியவர்கள்தான், உன்னதமான குடும்பத்தில் பிறந்து, நல்ல பெற்றோர்களால் வளர்க்கப்பட்ட பலர்தான், இன்று பிற சபைகளில் சேர்ந்து, அவைகளின் தீவிர உறுப்பினர்களாகவும், அவைகளின் கொள்கை பரப்புச் செயலாளர்களாகவும் மாறி, ஒன்றில் நம்மை சபிக்கிறார்கள், அல்லது நம்மை மாற்ற முயற்சிக்கிறார்கள் என்பதையும் நம்வர்களுக்கு சுட்டிக்காட்ட நாம் கடமைப்பட்டுள் ளோம்.

"அவர்கள் குறை கூறுவதால், மாதா ஒன்றும் குறைந்து விட மாட்டார்கள்" என்று வேதாந்தம் பேசுபவரும் நம்மிடையே உண்டு. அது உண்மைதான். பிறர் குறை சொல்வதால் எவரும் தாழ்ந்து விடுவதோ, அல்லது வீழ்ந்து விடுவதோ இல்லை. அப்படியிருக்க, நம்மை பெற்றெடுத்த தாயாரும் குறை சொன் னால், அவருக்கு எதிராகப் பேசினால், நாம் இப்படித்தான் தத்து வம் பேசிச் கொண்டு சும்மா இருப்போமா என்பதையும் ஒரு நொடி மனசாட்சியைத் தொட்டுக் கேட்டுப்பார்க்க வேண்டும். "அவர்களை வீட்டுக்குள்ளே அனுமதிக்கவோ, மாதாவுக்கு எதிராக அவர்களை பேசவோ விடமாட்டோம்" என்று உறுதி மொழி எடுப்போரும் உண்டு. பிரச்சனை என்னவென்றால், எத்தனை நாட்கள் இப்படி இருக்க முடியும்? "அவர்களோடு எனக்கு இனி எந்த ஒட்டும் உறவும் இல்லை" என்று தங்களை துண்டித்துக் கொள்பவர்களும் உண்டு. இதுவும் எத்தனை நாட்களுக்கு? வீட்டில் விசேடம் என்றால், அவர்களையும் கூப்பிட வேண்டியுள்ளது. காரணம், அவர்கள் நம் சொந்தம், நம் இரத்தம், நம் உடன்பிறப்பு. கொஞ்ச நாட்கள் கழித்து, "அவர்கள் என்ன வேறு மதத்திற்கா மாறி சென்றார்கள். அவர்களும் கிறிஸ்துவைத் தானே விசுவசிக்கிறார்கள்" என்று சமாதானம் பேசுவோரை நாம் சந்திக்காமல் இல்லை. "நாமும் கிறிஸ்து வைத்தானே விசுவசிக்கிறோம். அப்படியானால், ஏன் அவர்கள் நம்மை விட்டு பிரிந்து சென்றார்கள்" என்ற கேள்வியை ஏன் நம்மவர்கள் அவர்களிடம் எழுப்புவதில்லை என்பது நம்மை சற்று யோசிக்க வைக்கிறது. அவர்களை வெறுக்க வேண்டும் என்பது ஒருபோதும் நம்முடைய விருப்பமோ ஆலோசனையோ அல்ல. அது கிறிஸ்தவ மனநிலையும் அல்ல. யாரையும் வெறுக்க எவருக்கும் உரிமையும் இல்லை. அப்படியானால் என்னதான் செய்வது? "எப்படியும் போகட்டும்" என்ற மந்த நிலையை கைவிட்டு, மாதாவுக்கு எதிராக அவர்கள் சொல்வதில் உண்மையிருக்கிறதா? நாம் மாதாவுக்குச் செய்யும் பக்தி முயற்சிகளை தெரிந்துதான் செய்கிறோமா, அல்லது வாடிக்கை யாகவும் வேடிக்கையாகவும் செய்கிறோமா என்று, நம்மையே நாம் கேள்வி கேட்க கடமைப்பட்டுள்ளோம். எல்லோருக்கும் பதில் சொல்லவேண்டிய கட்டாயம் நமக்கில்லை. விசுவாசத்தினால் செய் யும் காரியங்களுக்கு, அறிவுக்கு எட்டக்கூடிய அளவில் விளக்கம் கொடுத்துவிட முடியாது என்பதும் நமக்கு தெரிந்ததே.

அன்பினால் ஒரு செயலைச் செய்கிறபோது, இப்படித் தான் செய்ய வேண்டும் என்று எவரும் நமக்கு கட்டளையிட உரிமை யில்லை என்பதையும் நாம் அறியாமல் இல்லை. "மாதா என் தாய். அவரைத் தோளிலும் சுமப்பேன், தேரிலும் இழுப்பேன். அவருக்கு பூமாலையும் சூடுவேன், பாமாலையும் இசைப்பேன். அதைக் கேட்க நீங்கள் யார்?" என்று எளிதில் அவர்களின் வாயை அடைத்து விட முடியும். இருப்பினும், நாம் செய்வது சரிதான் என்பதும், அதை எடுத்துச் சொல்ல நமக்கு தெரிந்திருக்க வேண்டும் என்பதும் இன்றைய காலத்தின் கட்டாயம். மாதா வுக்கு எதிரான அவர்கள் முன்னெடுக்கும் ஒரு சில வாதங்களை யும், அதற்கான விவிலிய அடிப்படையிலான பதில்களையும் தான் நாம் இங்கே பார்க்கப்போகிறோம். மரியாளைக் குறித்த திருச்சபையின் கோட்பாடுகளைப் பற்றி நாம் இங்கே விளக்கப் போவதில்லை. ஏனெனில் திருச்சபையின் மரபுகளை அவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும் என்பார்கள். அவர்கள் விவிலியத்தைக் கரைத்துக் குடித்துள்ளோம் என்று சொல்வதால், விவிலியம் சொல்வதை மட்டும் தான் கேட்போம் என்று அடம்பிடிப்பதால், அதே விவிலியத்தை அடிப்படையாக வைத்து நாமும் அவர்களுக்கு மாதாவைக் குறித்த பதிலை தருகிறோம். இருளைப் பழிப்பது அல்ல, ஒளியை ஏற்றுவதே நமது நோக்கம். புனித பவுலடியார் சொல்வதைப் போல, "திருச்சபைக்கு வெளியே இருப்பவர்கள் குற்றவாளிகள் என நான் ஏன் தீர்ப்பளிகக வேண்டும்? கடவுளே அவர்களுக்குத் தீர்ப்பளிப்பார்" (1கொரி 5:12-13). ஒரு புறம், இக்கட்டுரை அவர்களுக்கு பதில் சொல்ல உதவலாம். மறுபுறம், அதைவிட முக்கியமாக, மரியாளைப்பற்றி நாம் இன்னும் அதிகம் தெரிந்து கொள்ள இது ஒரு வாய்ப்பாக அமையலாம்.

மரியாளின் பிள்ளைகளுக்கு, அவளின் அருமை பெருமைகள் தெரியாதவை அல்ல. இருப்பினும், சற்றே தூசி தட்டி விடும் முயற்சியே இது. இங்கே சொல்லப்படும் மரியாளைக் குறித்த செய்திகள் புதியவை அல்ல. ஒருவேளை சொல்லும் விதம் ஒரு சிலருக்கு புதியதாய் இருக்கக் கூடும். நாம் செய்வது சரிதானா என ஆன்மீக சோதனை செய்யவும், அதற்கான காரணங்களை தெரிந்து கொண்டு, பிறரோடு அவைகளைப் பகிரந்து கொள்ள வேண்டும் என்பதே இம்முயற்சியின் தலையாய நோக்கம்.

## நடைமுறை அடிப்படையிலான வாதங்கள்

மரியாளுக்கு எதிரான வாதங்களை இருவகையாகப் பிரிக்கலாம். அவைகளில் ஒரு சில, வாழ்வின் அன்றாட செயல்களை அடிப்படையாக கொண்டவை. வேறு சில, விவிலியத்தை அடிப்ப டையாகக் கொண்டவை. உதாரணமாக, முட்டை வாங்குகி றோம். என்ன செய்கிறோம்? முட்டையை உடைத்து, உள்ளே இருக்கும் கருவை எடுத்து விட்டு, முட்டையின் தோட்டை வீசி எறிந்து விடுகிறோம். அது போலத்தான் மாதாவும் இயேசுவும். கருவை இயேசுவோடும், தோட்டை மரியாளோடும் இவர்கள் ஒப்பிடுகிறார்கள். கருவாகிய இயேசுவை எடுத்துக் கொண்டு, தோடாகிய மரியாளை வீசிவிட வேண்டும் என்பது இவர்களின் வாதம். அடுத்ததாக, மரியாள் இயேசுவின் உறவை வாழைப் பழத்தோடு ஒப்பிட்டு பேசுவோரும் உண்டு. பழத்தை எடுத்து விட்டு தோலை வீசிவிட வேண்டும் என்பது அனைவரும் அறிந்ததே. பழம் இயேசு, தோல் மரியாள் என்பது அவர்களின் தர்க்கம். அவர்கள் சொல்லும் மற்றொரு உதாரணமும் உண்டு. ஒரு வாகனம் வருகிறது. அதில் ஒரு முக்கிய நபர் வருகிறார் என்று வைத்துக் கொள்வோம். யாருக்கு நாம் மாலை போடுவோம்? வாகனத்திற்கா? அல்லது அதில் வரும் நபருக்கா? முக்கிய நபருக்குத் தானே? வாகனம் மரியாள், அதில் வரும் முக்கிய நபர் இயேசு என்பது அவர்களின் கூற்று.

முட்டைக் கதையை எடுத்துக் கொள்வோம். இயேசு கரு என் றால், அவர் வெள்ளைக் கருவா அல்லது மஞ்சள் கருவா என்ப தையும் அவர்கள் தான் நமக்குத் தெளிவுபடுத்த வேண்டும். காரணம், இன்று மஞ்சள் கருவை ஒதுக்கிவைப்போரும் உண்டு. வெள்ளைக் கருவை பயன்படுத்தாதவரும் உண்டு. முதலில் ஒரு மனிதரை ஒரு பொருளோடு ஒப்பிடுவது மிகவும் தவறு. ஒரு மனிதனை வெறுமனே ஒரு பொருளாகப் பார்ப்பது மனித சமுதாயத்திற்கே கேடு. ஒரு பொருளை வாங்குகிறோம். தேவை முடிந்ததும் அதை வீசி எறிந்து விடுகிறோம் (use and throw). இது பொருட்களுக்குப் பொருந்தும். மனிதர்களுக்கு எப்படி சரிபட்டு வரும்? மனிதர்கள் பொருட்களா? ஒரு மனிதனை ஒரு பொருளாக பார்ப்பதை விட, தரங்கெட்ட சிந்தனை வேறு எதுவும் இருக்க முடியாது. ஒரு மனிதனை தேவைக்கு மட்டும் பயன்படுத்துவர்களைவிட மட்டமானவர்கள் சமுதாயத்தில் வேறு யாரும் இருக்க முடியாது. இது சுயநல வாதத்தின் உச்சக் கட்டம். சந்தர்ப்பவாதிகளின் கூட்டுத்திட்டம். இவர்களது வாதத்தைப் பார்த்தால், பெற்றெடுத்த பிள்ளைகள், வயதான தன் பெற்றோர் களை சுமையாக எண்ணி ஒதுக்குவது சரியாகிவிடும். தனது விருப்பப்படி, தான் விரும்பிய நாள்மட்டும் வாழ்ந்துவிட்டு, பின்னர் ஏதோ ஒரு காரணத்திற்காக, எந்த ஒரு சலனமுமின்றி விவாகரத்து என்ற பெயரில் பிரியும் தம்பதிகளின் செயல் சரி யென்றாகி விடுமே! அல்லது தனது ஆசைக்காக, தேவைக்காக ஒருத்தியை அல்லது ஒருவனை பலியாக்கிவிட்டு கைகழுவு வதும் நியாயமானதாக மாறிவிடுமே! ஒருவன் என்னோடு பழகுவது, என்னை பயன் படுத்துவதற்காகத்தான் என்றால், நான் எப்படி அந்த நபரை நம்ப முடியும்? எப்படி என்னால் அவரோடு மனமுவந்து பழக முடியும்? அவரது தொடர்பை நான் எப்படி உறவாக எடுத்துக் கொள்ள முடியும்? இவர்களது வாதம், இன்றைய நுகர்வு கலாச்சாரத்தின் வெளிப்பாடு, மற்றும் அதன் உச்சக் கட்டம். தேவைக்கு மட்டும் மனிதர்களைப் பயன்படுத்தும் சந்தர்ப்ப வாதக் கூட்டம். இது மனித உறவையும், சகோதர நம்பிக்கையையும் கொச்சைப்படுத்துகிறது. இப்படிப்பட்ட போக்கு, சமூக கூட்டு வாழ்க்கையையே கேள்விக் குறியாக்கி விடும்.

உண்மைதான், வாழைப் பழத்தில் உள்ளே இருக்கும் பழத்தை மட்டும்தான் சாப்பிடுகிறோம். தோலை வீசி விடுகிறோம். அதற்காக யாரும் மாம்பழத்தில் உள்ளேயிருக்கும் கொட் டையை சாப்பிடுவது இல்லையே! (வாழைப்பழத்தின் தோலை சாப்பிடுவோரும் இங்குண்டு. மாம்பழத்தின் கொட்டையை



விழுங்குவோரும் நம்மிடையே உண்டு. அது வேறு கதை). வாகன உவமையை எடுத்துக் கொண்டால், அன்னை மரியாளை, இயேசுவை ஏற்றி வந்த வாகனம் தான் என்றுதான் நாமும் சொல்கிறோம். ஆனால், அவள் உயிருள்ள வாகனம் ஆயிற்றே. அதை முன் குறித்தவரும், தயார் செய்தவரும், ஓட்டி வந்தவரும், ஏன், உருவாக்கியவரும் கடவுள் ஆயிற்றே. அதிலே வந்தவர், சாதாரணப் பயணியைப் போல, இடையில் வந்து ஏறிக்கொண்டவர் அல்லர். அந்த வாகனத்திற்குள்ளேயே கருவானவர், உருவானவர்,

உடலெடுத்தவர். வாதிடும் அவர்களுக்கு நாம் சொல்லிக் கொள்வது இதுதான். வாகனத்தில் வருபவருக்கு, வாகனத்திற்கு கொடுக்கும் டீசலையோ பெட்ரோலையோ உணவாகக் கொடுப்பது இல்லை. வாகனம் அவரது பயணத்திற்கு மட்டும்தானே தவிர, வாகனம் பயணியையோ, பயணி வாகனத்தையோ பாதிப்பது இல்லை. இருப்பினும் கூட, பிரபலங்கள் பயன்படுத்திய பொருட்களுக்கு நாம் வாழும் சமூகத்தில் மரியாதை உண்டு, அளவுகடந்த விலை உண்டு. அவைகள் அபார விலைக்கு ஏலம் போவதை நாம் கண்கூடாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒரு பிரபல நபர் பயன்படுத்திய சாதாரண பொருளுக்கே, இந்தளவு முக்கியத்துவம் கொடுக்கும்

இந்த உலகம், இயேசுவை கருவாக்கிய, உருவாக்கிய மரியாளை எந்த அளவு தாங்கிப் பிடித்திருக்க வேண்டும்? சாதாரணமாக பயணிக்கும் ஒரு வாகனம், மணமக்களை ஏற்றிவரும் வாகனமாக மாறும்போது, அந்த வாகனத்தையும் அலங்காரம் செய்கிறோம் தானே? இவர்கள் சொல்லும் வாதமே மரியாளுக்கு செலுத்தும் பக்தி முயற்சியை நியாயப்படுத்துகிறது.

இயேசுவின் மனித உடல் மரியாளிடமிருந்து வந்தது. இயேசு குடித்த பால் மரியாளின் இரத்தம். இயேசுவை தாலாட்டியது, அவருக்கு உணவூட்டியது, அவரின் கைபிடித்து நடக்கச் சொல்லிக் கொடுத்தது, பேச பழக்கியது, அவரை யூத சமய, சமூக அடையாளங்களோடு வளர்த்தெடுத்தது அன்னை மரியாளே. மரியாளை ஒதுக்கிவிட்டு, அவர் பெத்லகேமில் இடம் தேடி அலைந்ததை மறந்துவிட்டு, தீவனத் தொட்டியில் குழந்தையை அவர் கிடத்தியதை நினைக்காமல், எப்படி ஒருவர் இயேசுவின் பிறப்பைப்பற்றி சிந்திக்கவோ, தியானிக்கவோ, கொண்டாடவோ முடியும்? மரியாளை நினைக்காமல், எப்படி ஒருவர் இயேசுவின் இளமைப் பருவத்தை அசைபோட முடியும்? மரியாவைக் குறிப்பிடாமல் எப்படி ஒருவர் இயேசுவின் முதல் புதுமையை விவரிக்க முடியும்? இயேசுவின் வாழ்விலும் வளர்ச்சியிலும் முழுமையாக கலந்துவிட்ட மரியாளைப்பற்றி பேசாமல், அவளின் அர்ப்பண உணர்விற்கும், எடுத்துக்காட்டான அவளது விசுவாச வாழ்க்கைக்கும் உரிய மரியாதையை செலுத்தாமல், எப்படி ஒருவர் இயேசுவின் சீடராக இருக்க முடியும்? இயேசு கிறிஸ்து மனிதராக வந்தார் என்பதை ஏற்றுக் கொள்ளா தவர்களை, மற்றும் ஏமாற்றுகிறவர்களை ''எதிர்க் கிறிஸ்துகள்'' என்று சாடுகிறார் புனித யோவான் (2 யோவான்7). மரியாளை மறந்துவிட்டு, மறுத்துவிட்டு அல்லது ஒதுக்கிவிட்டு, இயேசுவின் உண்மையான மனிதத் தன் மையை, எந்த அளவு ஒருவரால் ஏற்றுக்கொள்ளவோ, புரிந்து கொள்ளவோ முடியும்? முடியாது என்பது தான் எதார்த்தம். அந்த வகையில், மாதாவை மறுப்ப வர்களும் வெறுப்பவர்களும் யோவானின் வார்த்தைகளில் அந்திக் கிறிஸ்துகளே.

## விவிலிய அடிப்படையிலான வாதங்கள் இயேசு மரியாளை மதித்தாரா?

**கேள்வி**: இப்பொழுது விவிலியத்தை மேற்கோள்காட்டி அவர்கள் முன்வைக்கும் வார்தத்தை பார்ப்போம். அவர்கள் சொல்வது, இயேசுவே மரியாளுக்கு மரியாதை கொடுக்கவில்லை. உதார ணமாக, எருசலேமில் காணாமல் போன 12 வயது குழந்தை இயேசுவை, மூன்று நாட்கள் கழித்து மீண்டும் கோயிலில் மரியாளும் சூசையப்பரும் கண்டுபிடிக்கிறார்கள். ''மகனே ஏன் எங்களுக்கு இப்படி செய்தாய்? உன் தந்தையும் நானும் ஏக்கத்தோடு உன்னைத் தேடிக்கொண்டிருந்தோமே'' என்று மரியாள் அவரிடம் கேட்கிறார். இயேசு பணிவுடன் பதில் சொன் னாரா? இல்லையே! மாறாக, ''ஏன் என்னைத் தேடினீர்கள்? நான் என் தந்தையின் இல்லத்தில் இருக்க வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியாதா?'' (லூக் 2:48-49) என்று எதிர்க் கேள்வி தானே கேட்டார்? அப்படியானால், குழந்தையாக இருந்த போதே, இயேசு மரியாளை மதிக்கவில்லை என்று தானே பொருளா? மீண்டும், கானாவூர் கலியாணத்தின் போது, இரசம் தீர்ந்து விட்டது என்று மரியாள் சொன்ன போதும், இயேசுவின் பதில் எதிர்மறையாகத்தானே இருந்தது: ''அம்மா, அதைப்பற்றி நாம் என்ன செய்ய முடியும். எனது நேரம் இன்னும் வரவில்லையே'' (யோவான் 2:4) என்று தானே பதிலளித்தார். இதாவது பரவாயில்லை. ஒருமுறை மரியாள் இயேசுவைப் பார்க்க வருகிறாள். இயேசு போதித்துக் கொண்டிருக்கிறார். கூட்டமும் அதிகம். எனவே, மரியாள் இயேசுவின் சகோதரர்க ளோடு, அவருக்காக வெளியே காத்துக் கொண்டிருக்கிறார். இந்த செய்தி இயேசுவுக்கு சொல்லப்படுகிறது. இயேசு மரியாளை மதித்திருந்தால், அவர்மரியாளுக்கு உண்மையிலேயே மரியாதை கொடுத்திருந்தால், உடனே வெளியே வந்திருக்க வேண்டாமா? தன் தாயை சந்தித்திருக்க வேண்டாமா? ஆனால், இயேசு அப்படி ஒன்றும் செய்யவில்லையே? அவர் வெளியே வரவும் இல்லை. தன்தாயைச் சந்திக்கவும் இல்லை. வராதது மட்டுமல்லாமல், என்ன சொன்னார் என்று நினை விருக்கிறதா? தன்னிடம் கூறியவரைப் பார்த்து, ''என் தாய் யார்? என் சகோதரர்கள் யார்?'' என்று கேட்கிறார். பின், தன் சீடர் பக்கம் கையைக் நீட்டி, ''என் தாயும் சகோதரர்களும் இவர் களே'' என்று சுட்டிக்காட்டுகிறார் (மத் 12:48-49). இவையெல் லாம் இயேசு மரியாளை மதிக்கவில்லை என்பதைத் தானே வலியுறுத்துகிறது! இப்படி, இயேசுவே மதிக்காத, மரியாதை கொடுக்காத, கண்டுகொள்ளாத, பொருட்படுத்தாத மரியாளுக்கு, இயேசுவின் சீடர்கள் ஏன் மரியாதை கொடுக்க வேண்டும்? குருவின் வழிதானே சீடனின் வழியாகவும் இருக்க வேண்டும். சீடர் குருவுக்கு மேற்பட்டவன் இல்லையே! அப்படியானால், இயேசுவே மதிக்காத மரியாளுக்கு, கத்தோலிக்கர்கள் எப்படி மரியாதை கொடுக்கலாம்? அதையும் மீறி வணக்கம் செலுத்து வது இயேசுவுக்கு எதிரானது அல்லவா?

**பதில்:** இவர்களுக்கு என்ன பதில் சொல்வது? முதலில், இயேசு தன் தாயை மதிக்கவில்லை என்று சொல்வது, பாவம் இவர்க ளுக்குப் புரியவில்லை, அது உண்மையில் மரியாளுக்கு எதிரா னது அல்ல. முற்றிலும் அது இயேசுவுக்கு எதிரானது. அது அவரைக் குற்றவாளிக் கூண்டில் ஏற்றுகிறது. ''உன் தந்தை யையும் தாயையும் மதித்து நட'' (விப 20:12) என்ற நான்காவது கட்டளையை இயேசு மீறியதாக அவர்மீது வழக்கு பதிவு செய்கிறது. நிலையான வாழ்வு பெற பத்து கட்டளைகளைக் கடைபிடிக்க ஓர் இளைஞனுக்குச் சொன்ன இயேசு, நான்காவது கட்டளையை மட்டும் மீறினாரா? மேலும், அவர்கள் மரியா ளுக்கு எதிராக பயன்படுத்திய அந்த மூன்று நற்செய்திப் பகுதி களை வைத்தே, அவர்களுக்கு உரிய பதிலை நம்மால் கூற முடியும். பன்னிரண்டு வயதில் குழந்தை இயேசுவின் பதில் கேள்வியை மரியாதைக் குறைவாகப் பார்க்கும் இவர்கள், அடுத்த வசனத்தில் வருவதையும் ஏன் சேர்த்து வாசிப்பதில்லை என்பது தான் நாம் அவர்களிடம் கேட்கும் மறுகேள்வி. அதில் சொல்லப்பட்டிருப்பது இதுதான்: ''பின்பு அவர் அவர்களுடன் (யோசேப்பு, மரியாள்) சென்று நாசரேத்தை அடைந்து அவர்களுக்கு பணிந்து நடந்தார்'' (லூக்கா 2:51). கானாவூர் கலியாணத்தில் நடந்தது என்ன? இயேசு, தான் சொன்ன மறுமொழியோடு நிறுத்தியிருந்தால், அவர்களின் வாதம் சரிதான். ஆனால், ''எனது நேரம் வரவில்லை'' என்று சொன்ன இயேசு, பின்னர் தண்ணீரை ரசமாக மாற்றுகிறாரே! ஏன் அவ்வாறு செய்ய வேண்டும்? அதன் அர்த்தம் என்ன? அதனை

இரண்டு கோணங்களில் பார்க்க வேண்டியுள்ளது. ஒருபுறம், இயேசுவின் மீது மரியாள் வைத்திருந்த அசைக்க முடியாத நம்பிக்கை. மறுபுறம் தாயின் வார்த்தைகளுக்கு இயேசு கொடுத்த உன்னதமான மரியாதை. மகனின் பதில் எதிர்மறையாக இருந்தாலும், சிறிதும் தயங்காது மரியாள் பணியாளர்களிடம் சொல்லுகிறார், ''அவர் உங்களுக்கு சொல்வதை யெல்லாம் செய்யுங்கள்'' (யோவான் 2:5). ஒரு மகனை, அவன் தாயைவிட யார் அதிகம் அறிந்திருக்க முடியும்? தன் மகனைப் பற்றி அவளுக்குத் தெரியாதா? அவர் யார் என்பதும், எதற்காக அவர் மனுவுரு எடுத்தார் என்றும், முதலில் அவளுக்குத் தானே சொல்லப்பட்டது! தான் வளர்த்த மகன், பிறரது துன்பத்தைப் பார்த்தால் என்ன செய்வார் என்று அவளுக்குத் தெரியாதா?

''தாயைப்போல பிள்ளை! நூலைப்போல சேலை'' என்னும் பழமொழி, தாய் மரியாளுக்கும் பிள்ளை இயேசுவுக்கும் பொருந்தும் தானே! பிந்தைய நாட்களில், புதுமைகளை செய்த பிறகு இயேசு சொல்லுவார், ''உனது நம்பிக்கை உன்னை குணமாக்கியது'', ''நீ விரும்பிபடியே ஆகட்டும்'' என்று. கானாவூர் கலியாணத்தில், இயேசு அப்படிப்பட்ட வார்த்தைகளை சொல்லாவிட்டாலும் அதுதான் நடக்கிறது. ஒருபுறம், தன் மகன் நிச்சயம் குறை தீர்ப்பார் என்ற மரியாளின் தீர்க்கமான நம்பிக்கை. மறுபுறம் தன்னுடைய நேரம் வரவில்லை என்று உறுதியாக தெரிந்தும் அதை தன் தாயிடம் வெளிப்படையாக சொல்லிய பின்னரும் கூட, தன் தாய் சொல்லி விட்டாள் என்னும் ஒரே காரணத்திற்காக, இயேசு தன் முதல் புதுமையைச் செய்கிறார். ஆக, இயேசுவின் முதல் புதுமை, மரியாளின் பரிந்துரையால் நடந்தேறுகிறது. மரியாளின் வழியாக செபிக்குமாறு திருச்சபை பரிந்துரைக்கிறது என்றால், அதற்கு காரணமும் இதுதான். ''வார்த்தை அல்ல, ஒருவரின் செயலே அவரின் உண்மையான முகத்தை வெளிப்படுத்தும்'' என்ற செய்தியை வலியுறுத்தும் இயேசுவின் ''இரு புதல்வர்கள் உவமைக்கு'' (மத் 21:18-32) இங்கு அவரே சான்றாக நிற்கிறார். மரியாள் பரிந்துரைத்தால் இயேசு நிச்சயமாய் செய்வார். தனது நேரம் வராதபோதே, தாயின் வார்த்தைக்கு செவிமடுத்து, புதுமை செய்த இயேசு, இப்பொழுது மகிமையான நேரத்தில் மட்டும் அந்தத் தாய் சொல்லுவதை மறுப்பாரோ? ''தாய் சொல்மிக்க மந்திரம் இல்லை'' என்பது இயேசுவின் வாழ்க்கைப் பாடம். ''இயேசுவை சீடர்கள்'' என்று அறிக்கையிடும் இவர்களுக்கு மட்டும் ஏன் அது புரிவதில்லை என்பதுதான் நம்மை ஆச்சரியத் துள்ளாக்குகிறது.

மரியாளுக்கு எதிராகப் பயன்படுத்தப்படும் அடுத்த நற்செய்தி பகுதியை எடுத்துக்கொள்வோம் (மத் 12:46-50). இதுவும் மரியாளுக்கு எதிரானது அல்ல. மாறாக, அவளுக்கு ஏன் மரியாதை கொடுக்க வேண்டும் என்பதற்கு மேலும் வலு சேர்ப்ப தாகவே அமைந்தள்ளது. ''யார் என் தாய்? என்று கேட்டதோடு, இயேசு நின்றுவிடவில்லை. தொடர்ந்து, ''விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறைவேற்றுபவரே, என் சகோதரரும் சகோதரியும் தாயும் ஆவார்'' (மத் 12:50) என்றும் அவர் கூறுகிறார். அதன் பொருள் என்ன? ''என்னைப் பெற்றெடுத்ததால் மட்டும், மரியாள் எனக்குத் தாயல்ல. அதற்கு முன்பே, இறைதந்தையின் திருவுளத்திற்கு ''இதோ உமது அடிமை. உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்'' என்று தன்னை கையளித்த பொழுதே, அவள் எனக்குத் தாயாகி விட்டாள்'' என்று இயேசு கூறுவதாகத் தானே பொருள் கொள்ள முடியும்! இந்த இரு முறைகளிலும் இயேசுவுக்குத் தாயாகும் பாக்கியம் மரியாளுக்கு மட்டுமே உண்டு. சீடர்கள் கடவுளின் திருவுளத்திற்கு ஏற்றபடி வாழ்ந்தால், உள்ள ரீதியாகவோ, ஆன்மீக ரீதியாக மட்டும்தான் இயேசுவின் தாயாகவோ, சகோதர சகோதரியாகவோ மாற முடியும்.

ஆனால் யாரும் இயேசுவைப் பெற்றெடுத்த தாயாக மாறி விட முடியாது. மரியாளின் இந்த இரண்டு தாய்மைகளையும் பற்றி புனித அகுஸ்தினார் அழகாகக் குறிப்பிடுகிறார்: ''இயேசுவை உதிரத்தில் கருத்தாங்கும் முன்பே, மரியாள் அவரை தன் இதயத்தில் கருவாக்கினார்''. புனித எலிசபெத்தும், இதனால் தான் மரியாளை "ஆண்டவரின் தாய்" இயேசுவைப் பெற்றெடுக்கும் முன்னரே என்று அழைக்கிறாள். பொதுவாக, குழந்தையைப் பெற்றெடுத்த பின் தானே, ஒரு பெண்ணை தாயென அழைக்க முடியும்? நடைமுறை பழக்கங்கள் கூட மரியாளின் விடயத்தில் மாறுகின்றன. மற்றொரு கோணத்தில் பார்த்தால், இது மரியாளின் தாய்மையின் இரகசியத்தை சுட்டிக் காட்டுவதாகவும் அமைந்துள்ளது. மரியாள் மனித முறையினால் தாயாகவில்லை. கடவுளின் விருப்பத்திற்கு "ஆம்" என்று சொன்னதால்தான் தாய்மையை அடைந்தாள். அவளைப்போல, யாரெல்லாம் ஆண்டவரின் வார்த்தைக்கு "ஆம்" என்று பதில் சொல்லி, அதன்படி வாழ்கிறார்களோ, அவர்களெல்லாம் என் தாயாக முடியும் என்று மரியாளின் தாய்மையைத் தான் இயேசு மறைமுகமாக எடுத்துக்காட்டுகிறார் என்றும் இப்பகுதியைப் புரிந்து கொள்ளலாம். இவ்வாறு தன்னைப் பெற்றெடுத்த தாயை, தன் சீடர்களுக்கு ஒரு எடுத்துக்காட்டாக முன்னிறுத்துகிறார். மரியாளை சுட்டிக்காட்டி அது நடைமுறை சாத்தியம்தான் என்று அடித்துச் சொல்கிறார். "நீங்கள் ஒவ்வொருவரும் மற்றொரு மரியாளாக மாற வேண்டும்" என்று தன் சீடர்களுக்கு அறைகூவல் விடுக்கிறார். மேலும், அவர்கள் சொல்லுவது போல, இயேசு மரியாளை தன்னுடைய தாயாக ஏற்கவில்லையென்றால், சிலுவையில் தொங்கும் போது மட்டும் "இதோ உன் தாய்" என்று புனித யோவானிடம் ஏன் கூற வேண்டும்? வாழும் போது ஒன்று, சாகும்போது வேறொன்று என்ற இரட்டை வேடம் போட்டவரா இயேசு? இயேசு மரியாளை மதிக்கவில்லை என்று சொன்னால், சாகும் தறுவாயில் மட்டும் ஏன் அவளைக் கண்டு கொள்ள வேண்டும்? ஏன் இந்த திடீர் ஞானம்? இயேசுதான் கடைசி நேரத்தில் உணர்ச்சிவசப்பட்டுவிட்டார் என்று ஒரு வேளை இந்த தர்க்கவாதிகள் முன் வைக்கக் கூடும்.

ஆனால், இயேசுவின் வார்த்தைகளை ஏன் யோவான் உடனே செயல்படுத்த வேண்டும்? இயேசு மரியாளை மதிக்கவில்லை என்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப்பிறகு இவர்களுக்கு தெரிந்த உண்மை, இயேசுவோடு இருந்த, அவரது மார்பில் சாயக்கூடிய அளவு இயேசுவோடு நெருக்கமான உறவில் திளைத்த யோவானுக்கு மட்டும் எப்படி தெரியாமல் போனது? யோவானைக் காட்டிலும் பெரியவர்களா இவர்கள்? "யாருக்கு செவிசாய்ப்பது? கடவுளுக்கா அல்லது உங்களுக்கா? இதில் கடவுள் பார்வையில் எது முறையானது என நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்" (திப 4:19) என்று பேதுருவும் யோவானும் அன்று தலைமைச் சங்கத்தாரிடம் சொன்னதைத் தான் இன்று நாம் இவர்களுக்குச் சொல்ல வேண்டியுள்ளது.

## மாதாவுக்கு வேறு பிள்ளைகள் உண்டா?

**கேள்வி:** தொடர்ந்து, விவிலியத்தை அடிப்படையாகவைத்து, மரியாளுக்கு எதிராக பிற சபையினர் தொடுக்கும் அடுத்த ஏவுகனை, அவளது மாசற்ற கன்னித்தன்மையை குறித்துதான். "இயேசுவை கருவுற்ற போதும், அவரைப் பெற்றெடுத்த போதும், பெற்றெடுத்த பின்பும், மரியாள் முக்காலமும் கன்னியாகவே இருந்தாள்" என்பது திருச்சபையின் விசுவாசக் கோட்பாடு. அது எப்படி சாத்தியம்? மத்தேயு தனது நற்செய்தியில் தெளிவாகக் குறிப்பிடுகிறார், "மரியா தம் மகனைப் பெற்றெடுக்கும்வரை, யோசேப்பு அவரோடு கூடிவாழவில்லை" (மத் 1:25). அப்படி யென்றால், "இயேசுவைப் பெற்றெடுத்த பிறகு, சூசையப்பர் அவ ளோடு கூடி வாழ்ந்தார் என்று தானே பொருள்!" என்பது அவர்க ளின் வாதம். இயேசுவுக்கு சகோதரர்கள் இருப்பதாகவும் விவிலியம் சொல்லுகிறதே! கானாவூர் திருமணம் முடிந்தபின் "அவரும் அவர் தாயும் சகோதரர்களும் அவருடைய சீடரும் கப்பர்நாகும் சென்று அங்குச் சில நாள்கள் தங்கியிருந்தனர் (யோவான் 2:12). மரியாள் இயேசுவின் சகோதரர்களோடு, இயேசுவைத் தேடிவருகிறாள் (மத் 12:47). இயேசுவின் சொந்த ஊர்க்காரர்கள், அவரை ஏற்றுக்கொள்ளத் தயங்கியபோது, இயேசுவின் சகோதரர்களைப்பற்றி குறிப்பிடுகிறார்கள்: "இவர் தச்சர் அல்லவா! மரியாவின் மகன்தானே! யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா? இவர் சகோதரிகள் இங்கு நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா? (மாற்கு 6:3). இயேசுவின் சகோதரர்கள் என்றால், மரியாளின் குழந்தைகளாகத்தானே இருக்க வேண்டும்? அப்படியானால் மரியாளை எப்படி முக்காலத்தும் கன்னி என்று கூறமுடியும்? மேலும், லூக்கா 2:6-7ல் சொல்லப்பட்டுள்ளது: "அவர்கள் அங்கு இருந்தபொழுது மரியாளுக்கு பேறுகாலம் வந்தது. அவர் தம் தலைமகனைப் பெற்றெடுத்தார்." மரியாளுக்கு வேறு குழந்தைகள் இல்லையென்றால், "ஒரே மகனைப் பெற்றெடுத்தார்" என்று தானே சொல்லியிருக்க வேண்டும். தலைமகன் அல்லது முதல் மகன் என்றால் வேறு குழந்தைகள் இருந்ததாகத் தானே அர்த்தம் என்று அவர்கள் வாதிடுகிறார்கள்.

**பதில்:** இதற்கு எப்படி பதில் சொல்வது? முதலில் மத் 1:25ஐ எடுத்துக்கொள்வோம். பொதுவாகவே, நற்செய்தியில் ஒவ்வொரு பகுதியையும் படிக்கிறபோது, அதை முழுமையாகப் படிக்க வேண்டும். எனெனில், நற்செய்தியாளர்கள் ஒரு செய்தியை பதிவு செய்யும் போது, அவர்களுக்கென்று ஒரு தனித்தன்மை, நோக்கம், சூழல், காலம், வாசகர்கள் என்று உண்டு. நற்செய்தி யைப் படித்தால் மட்டும் போதாது. நற்செய்தியைப் பற்றியும் படிக்க வேண்டும். யார் எழுதியது? யாருக்காக எழுதப்பட்டது? எங்கு, எப்பொழுது, எதற்காக எழுதப்பட்டது என்பது தெரியாமல், நற்செய்திகளையும், அவைகளுக்கு இடையே உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நம்மால் புரிந்து கொள்ளமுடியாது. மத்தேயு வைப் பொறுத்தவரையில், அவர் யூதர்களுக்கு எழுதுகிறார். யூத சமுதாயத்தில், பெண்கள் திருமணமாகாமல் இருப்பதோ, கன் னியாக இறப்பதோ உயர்ந்த தொன்றாகக் கருதப்படவில்லை. ஒருவேளை அப்படி இருக்கவோ, இறக்கவோ நேர்ந்தால், அது ஒரு சாபமாகவே பார்க்கப்பட்டது.

யூதப் பெண்களுக்கு திருமணமும் குழந்தைப் பேறும் மிகவும் முக்கியம். இதன் அடிப்படையில்தான், லோத்தின் இருபெண் பிள்ளைகளும் தங்களின் கன்னி கழிவதற்காக, குழந்தைகளைப் பெற்றுக்கொள்வதற்காக, தங்களின் தந்தையோடு கூட உறவு கொள்கிறார்கள் (தொநூ 19:30-38). எப்படியாவது தனக்கு வாரிசு வேண்டும் என்பதற்காக தன் மாமனார் யூதாவோடு தாமார் விலைமாதுவைப் போல் நடித்து, உறவு கொள்கிறாள். யூதாவும் அதைப் பாராட்டுகிறார் (தொநூ 38). இச்செயலிலி ருந்தே, திருமணம், குழந்தைப்பேறு எந்தளவு முக்கியத்துவம் என்பது சொல்லாமலேயே நமக்குப் புரிகிறது. நீதித் தலைவர் களில் ஒருவரான இப்பிதாவின் புதல்வி கன்னி கழியாமல் இறந்ததால், அவளை முன்னிட்டு யூதர்கள் கன்னிமைக் குறித்து இரண்டு மாதங்கள் துக்கம் கொண்டாடியதாக வாசிக்கிறோம் (நீதி11:36-40). ஆபிரகாமின் மனைவி சாராளுக்கு குழந்தை இல்லாதால், அவளது எகிப்திய பணிப்பெண் சாராளை ஏளனத்துடன் நோக்கினாள்" என்று தொடக்க நூல் கூறுகிறது (தொநூ 16:4). எல்கானாவின் மனைவி அன்னாளுக்கு குழந் தையில்லாததால், அவளது சக்களத்தி அவளை துன்புறுத்தி வந்ததாக வாசிக்கிறோம் (1சாமு 1:6). இன்னும் இதுபோன்ற எத்தனையோ எடுத்துக்காட்டுகளை விவிலியத்தில் நம்மால் காணமுடியும். இதிலிருந்து ஒன்று தெளிவாகப் புரிகிறது. அன்றைய யூத சமூகத்தில் பெண்கள் திருமணமாகமலிருப்பதோ, அவர்கள் கன்னி கழியாமல் இறப்பதோ, குழந்தைப் பேறின்றி இறப்பதோ ஒரு குறையாகவும், இழுக்காகவும், அவமான மாகவும், சாபமாகவும் கருதப்பட்டது.

இப்பொழுது மத்தேயுவின் நற்செய்தி பகுதிக்கு வருவோம். ஏற்கனவே, மரியாவுக்கும் யோசேப்புக்கும் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டிருப்பதாக மத்தேயு குறிப்பிடுகிறார் (1:18). இப்பொழுது மரியாள் கருவுற்றிருக்கிறாள் என்றால், அதற்கு யோசேப்புதான் காரணம் என்று சமூகம் நினைக்கும். மரியாளின் கர்ப்பத்திற்கு தான் காரணம் இல்லை என்பது யோசேப்புக்கு மட்டும்தான் தெரியும். எனவே அவளை மறைவாக விலக்கிவிட தீர்மானிக் கிறார் (மத் 19). அவரின் குழப்பத்திற்கு, தூக்கத்தில், கனவில், தூதர் மூலம் தெளிவு கிடைக்கிறது: "மரியாள் கருவுற்றிருப்பது தூய ஆவியால்தான்" (மத் 1:20). யோசேப்புக்கு மட்டுமே தெரிந்த அந்த உண்மையை, மத்தேயு இப்பொழுது யூத சமூகத்திற்கு எடுத்துச்சொல்கிறார். மரியாள் கருவுற்றிருப்பது தூய ஆவியால் தான் என்றும், யோசேப்பு அவளோடு உறவு கொள்ளவில்லை என்றும் சொல்வதன் மூலம் இயேசுவின் கன்னிப்பிறப்பை மீண்டும் வலியுறுத்துகிறார். இயேசுவின் பிறப்பில் எந்த ஆணுக்கும் தொடர்பில்லை என்று தெளிவுபடுத்துகிறார். இயேசு "யோசேப்பின் மகன் அல்ல" என்று கோடிட்டுக் காட்டுகிறார். இங்கு ஒன்றைத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். மாதாவின் கன்னித்தன் மையைப் பற்றி பேசுவது மத்தேயுவின் நோக்கம் அல்ல. இயேசுவின் கன்னிப்பிறப்பை தெளிவுபடுத்துவ தற்காகவே "மரியா தம் மகனைப் பெற்றெடக்கும் வரை யோசேப்பு அவரோடு கூடி வாழவில்லை" என்று குறிப்பிடுகிறார். புதிய ஏற்பாடு எழுதப்பட்ட மூலமொழியான கிரேக்க மொழி தெரிந்தவர்கள், மத்தேயு நற்செய்தியில் காணப்படும் இயேசுவின் மூதாதையர் பட்டியலில் (மத் 1:1-17) இந்த உண்மை பொதிந் திருப்பதை அறிந்து கொள்ள முடியும். முந்தைய பாப்பரசர் 16ஆம் ஆசீர்வாதப்பர், தான் கடைசியாக எழுதிய "இயேசுவின் இளமைப் பருவம்" என்னும் நூலில் அதைக் குறிப்பிட்டுள்ளார்.

வேறு மொழிபெயர்ப்புகளில், குறிப்பாக தமிழில், அந்த வேறுபாடு துல்லியமாக சுட்டிக்காட்டப்படவில்லை. மற்ற எல்லா தலை முறையினருக்கும் இவர் இன்னாருடைய மகன் என்று குறிப்பிடும் மத்தேயு, இயேசுவைப்பற்றி சொல்லும் போது மட்டும் "மரியிடம் பிறந்தவர் இயேசு" என்று வலியுறுத்துகிறார். அதாவது, மற்ற எல்லா தலைமுறைகளிலும், தந்தையும் தாயும் இணைந்து தங்கள் வாரிசுகளை உருவாக்குகிறார்கள் (பிரெஞ்சு மொழியிலே "engendrer" என்ற வினைச்சொல், ஆங்கிலத்தில் "to give birth" என்ற சொல்). ஆனால், இயேசுவைப் பற்றி சொல்லும் போதுமட்டும், அவர் பெற்றெடுக்கப்படவில்லை, மாறாக, பிறக்கிறார் (பிரெஞ் சில் "être né", ஆங்கிலத்தில் "to be born"). இயேசுவின் பிறப்பு எவ்வகையிலும் மனித செயல் அல்ல என்பதை வலியுறுத்தவே மத்தேயு அவ்வாறு குறிப்பிடு கிறார். எனவே, "மரியா தம் மகனைப் பெற்றெடுக்கும் வரை, யோசேப்பு அவரோடு கூடி வாழவில்லை" என்னும் மத்தேயுவின் குறிப்பு, மரியாளின் கன்னித் தன்மையைப் பற்றி பேசுவதற்கு அல்ல. அப்படி பேசவேண்டிய தேவையும் மத்தேயுவுக்கு இல்லை. இங்குகூட "மரியாதம் மகனை" என்று மிகவும் கவனமாக சொல்வதன் மூலம், இயேசுவின் பிறப்புக்கு சூசையப்பர் துளியும் காரணமல்ல என்பதைச் சுட்டிக்காட்டுகிறார்.

மேலும், மரியின் கன்னித்தன்மையைப் பற்றி பேசினால், அக்காலத்தில் அது யூத சமுதாயத்தில் மரியாளுக்கு மரியாதையை அல்ல, அவமதிப்பை தான் கொண்டு வரும். அதே சமயம், இயேசுவின் கன்னிப்பிறப்பை வலியுறுத்த வேண்டியிருந்தது. யூதர்களுக்கு எழுதுவதால், இயேசுவுக்கும் பழைய ஏற்பாட்டுக்கும் உள்ள தொடர்பை சுட்டிக் காட்ட வேண்டிய தேவை மத்தேயுவுக்கு இருந்தது. இயேசுதான் பழைய ஏற்பாட்டு இறை வாக்கினர்கள் முன்னறிவித்த மெசியா என்று நிருப்பிக்கவேண்டிய கட்டாயம் இருந்தது. மெசியா பற்றிய பழைய ஏற்பாட்டு இறைவாக்குகளுள் ஒன்று, அவருடைய கன்னிப்பிறப்பு. ஏனெனில், "கன்னி கருத் தாங்கி ஒரு மகனைப் பெறுவார். அவருக்கு இம்மானுவேல் என்று பெயரிடுவார்" என்று இறைவாக்கினர் எசாயா குறிப்பிட்டுள்ளார் (எசா 7:14). எசாயாவின் இதே இறைவாக்கை மத்தேயு ஏற்கனவே குறிப்பிடுகிறார் (மத் 1:22-23). எனவே "மரியா தம் மகனை பெற்றெடுக்கும்வரை, யோசேப்பு அவரோடு கூடி வாழவில்லை" என்னும் மத்தேயுவின் குறிப்பு இயேசுவின் கன்னிப்பிறப்பை வலியுறுத்தத்தானே தவிர, அக்கூற்றை அடிப்படையாக வைத்து, மாதாவின் கன்னித் தன்மைக்கு எதிராக வாதிடுவோர்கள் விவிலியத்தை சரியாக புரிந்து கொள்ளவில்லை என்பதை தான் அது பிரதிபலிக்கிறது. இங்கு மற்றொரு கருத்தையும் வெறுமனே வாதத்திற்காக மட்டும் எடுத்துக் கொள்வோம். இச்சொற்றொடரை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை பொருள் கொள்ளவும் கூடாது. "மரியா தம் மகனை பெற்றெடுக்கும் வரை, யோசேப்பு அவரோடு கூடி வாழவில்லை" என்பதை வைத்து, இயேசு பிறந்த பின் உறவு கொண்டார் என்று வாதிட முடியாது என்பதற்கும் விவிலிய ஆதாரங்கள் உண்டு. "நான் உனக்கு வாக்களித்ததை நிறைவேற்றுமளவும் உன்னைக் கைவிட மாட்டேன்" யாக்கோபிடம் கடவுள் வாக்கு கொடுக்கிறார் (தொநூ 28:15). கடவுள் கொடுத்த வாக்குறுதி இதுதான்: "நீ படுத்திருக்கும் நிலத்தை உனக்கும் உன் வழிமரபிற்கும் தருவேன். உன் வழிமரபோ நிலத்தின் மணலுக்கு ஒப்பாகும்"




(தொநூ 28:13-14). அப்படியானால், வாக்கை நிறைவேற்றும் வரை கைவிடவில்லை, அதன்பின் கைவிட்டுவிட்டார் என்று அர்த்தம் கொள்ளமுடியுமா? அல்லது யாக்கோபின் சந்ததி நிலத் தின் மணலைப் போல பெருகும் அளவுக்கு, யாக்கோபு உயி ரோடு இருந்தார், கடவுளும் அவரோடு இருந்தார் என்று புரிந்து கொள்ளலாமா? இவ்விடத்தில் "கைவிடமாட்டேன்" என்னும் கடவுளின் வாக்கை எப்படி புரிந்து கொள்வது? "சவுலின் மகள் மீக்காலுக்குச் சாகும்வரை குழந்தைப்பேறு கிட்டவில்லை" (2சாமு 6:23) என்று சொல்லப்பட்டுள்ளது. அப்படியானால், இறந்தபிறகு அவருக்கு குழந்தைப்பேறு கிட்டியது என்று யாராவது வாதாட முடியுமா? எனவே "மரியா தன் மகனைப் பெற்றெடுக்கும்வரை யோசேப்பு அவரோடு உறவு கொள்ள வில்லை" என்று மத்தேயு குறிப்பிடுவதை மட்டும் அடிப்படையாக வைத்து, இயேசுவைப் பெற்றெடுத்த பிறகு உறவு கொண்டார் என்று யாராவது வாதிட்டால் அவர் விவிலியத்தை முழுமையாக படிக்கவில்லை, அல்லது வேண்டுமென்றே ஒருசில பகுதிகளை மறைத்து, அறியாதவர்களை ஏமாற்றும் முயற்சிகளில் ஈடு படுகிறார் என்றுதான் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

மற்றொரு கருத்தும் மரியாளின் கன்னிமைக்கு வலுசேர்க்கும் வகையில் நற்செய்தியில் காணக்கிடக்கிறது. கபிரியேல் தூதர் மரியாளுக்குத் தோன்றி, "இதோ கருவுற்று ஒரு மகனைப் பெறுவீர்" என்று சொன்னதும், மரியா வானதூதரிடம், "இது எப்படி நிகழும்? நான் கணவனை அறியேனே!" (லூக் 1:26-38) என்கிறாள். மரியாளின் கேள்வி நம்மை சற்று சிந்திக்கவைக்கிறது. அவள் திருமண ஒப்பந்தம் செய்யப்பட்ட பின்னர் தான் இந்த செய்தி அவளுக்கு தூதரால் அறிவிக்கப்படுகிறது. கணவனோடு கூடிவாழத் தொடங்குமுன் அச்செயல் நடைபெறும் என்று தூதர் சொல்லவில்லை. திருமணத்தின் மூலம், கணவனோடு சேர்ந்து வாழ்ந்தபின், அச்செயல் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கும்போது, மரியாள் ஏன் அந்த கேள்வியை தூதரிடம் கேட்கவேண்டும்? இந்த கேள்வியை அடிப்படையாகவைத்து, மரியாள் நிரந்தர கன்னி வார்த்தைப்பாடு ஏற்கனவே எடுத்திருக் கக்கூடும். இல்லையென்றால், தூதரிடம் "இது எப்படி நிகழும்? நான் கணவனை அறியாதவள்" என்று சொல்வதில் அர்த்தம் இருப்பதாகத் தெரியவில்லை. அதேசமயம், இக்கூற்றை ஏற்றுக்



கொள்வதும் சற்று சிரமம்தான். அக்காலக்கட்டத்தில், நாம் ஏற்கனவே தொடக்கத்தில் குறிப்பிட்டுள்ளதுபோல, யூதப் பெண்கள் நித்திய கன்னியாக இருப்பதை விரும்புவதில்லை, அது ஒரு உயர்ந்த விழுமியாக சமூதாயத்தில் கருதப்படவில்லை. அதுவும் இப்படி ஒரு கன்னிமை வார்த்தைப்பாட்டை எடுத்துக் கொண்டு, எப்படி யோசேப்போடு திருமண ஒப்பந்தம் செய்யமுடியும் என்பதும் சற்று யோசிக்கச் செய்யும் விடயம்தான். ஒருவேளை யோசேப்பு ஏற்கனவே திருமணம் செய்து, அதன் மூலம் குழந்தைகள் இருந்தால், அவரிடம் பேசி தனது கன்னிமை வார்த்தைப்பாட்டை வாழ்ந்துவிடலாம் என்றும் அவள் எண்ணியிருக்கலாம்.

அடுத்து, இயேசுவின் சகோதரர்களைப் குறித்து பார்ப்போம். நற்செய்திகள் பலமுறை இயேசுவின் சகோதரர்களைப் பற்றி குறிப்பிடுகின்றன: மாற்கு 3:31ளு 6:3ளு மத் 13:55-56, யோவான் 2:12 7:3 போன்றவை. பழைய ஏற்பாட்டில் எபிரேய மொழியில் சகோதரர் என்பதற்கு ஆஹ் (யா) என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. இச்சொல்லானது உடன் பிறந்த சகோதரனையும், ஒன்றுவிட்ட சகோதரனையும் (தொநூ 42:15 43:5), மருமகனையும் (தொநூ 13:8 14:16), சித்தப்பா பெரியப்பா போன்றவர்களையும் (லேவி 10:4 1குறி 23:21-22) குறிப்பிட பயன்படுத்தப்பட்டுள்ளது. எபிரேய மொழியில் உடன் பிறந்த சகோதரர்களையும் ஒன்றுவிட்ட சகோதரர்களையும் வித்தியாசப் படுத்தி கூறுவதற்கு தனிப்பட்ட வேறு வேறுவார்த்தைகள் இல்லை. அனைத்துக்கும் ஆஹ் என்ற சொல்லே பயன்படுத்தப் பட்டுள்ளது. அதேசமயத்தில் கிரேக்க மொழியில் உடன் பிறந்த சகோதரனை குறிக்க ஆதல்ஃபோஸ் (adelphos) என்ற வார்த்தையும், ஒன்றுவிட்ட சகோதரர்களைக் குறிக்க அனெப்ஸியோஸ் (anepsios) என்ற வார்த்தையும் உள்ளன. இப்படி கிரேக்க மொழியில் வித்தியாசப்படுத்திக் கூற வேறு வேறு வார்த்தைகள் இருந்த போதிலும் கூட, எபிரேய ஆஹ் என்னும் வார்த்தைக்குப் பதிலாக ஆதல்ஃபோஸ் என்ற ஒரே வார்த்தையைத்தான் அனைத்து இடங்களிலும் கிரேக்க மொழியிலான பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே, பழைய ஏற்பாட்டில் ஆதல்ஃ போஸ் என்ற சொல்லை கிரேக்க மொழி பயன்படுத்தியிருப்பதால், அது உடன்பிறந்த சகோதரர்களை குறிக்கும் என்று யாரும் உறுதியாக திட்ட வட்டமாகக் கூறமுடியாது என்பதை நாம் மேலே தந்துள்ள விவிலிய மேற்கோள்கள் சுட்டிக்காட்டுகின்றன.

ஆனால், புதிய ஏற்பாடு எபிரேய மொழியில் எழுதப்படவில்லை. அவை அனைத்தும் கிரேக்க மொழியில் எழுதப்பட்டவை. புதிய ஏற்பாட்டில் மொத்தம் 343 முறை ஆதல்ஃபோஸ் (யனநடிாழள ஸ்ரீ சகோதரன்) என்ற வார்த்தையும், 26 முறை ஆதல்ஃபெய் (adelphey ஸ்ரீ சகோதரி) பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒரே ஒருமுறை மட்டும் அனப்ஸியோஸ் (கொலோ 4:10) என்ற வார்த்தைப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இயேசுவின் சகோரர்கள் என்பது அவரின் உடன் பிறந்த சகோதரர்களையே குறிக்கும் என்றும், அவர்கள் மரியாளின் குழந்தைகளே என்று சொல்பவர்களும் வைக்கும் வாதம் இதுதான்: ஒன்றுவிட்ட சகோகரர்களைக் குறிக்க கிரேக்க மொழியில் அனெப்ஸியோஸ் என்ற வார்த்தை உள்ளது. ஆனால் நற்செய்தியாளர்கள் அந்த வார்த்தையைப் பயன்படுத்தாமல், உடன்பிறந்த சகோதரனைக் குறிக்கும் ஆதல்ஃ போஸ் என்னும் வார்த்தையைப் பயன் படுத்தியிருப்பதால், அவர்கள் இயேசுவின் உடன்பிறந்த சகோதரர்களே என்று அடித்துக் கூறுகின்றனர். பாவம் அவர்கள்! புதிய ஏற்பாட்டில் அச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ள பகுதிகளை எடுத்துப் பார்த்தால், ஆதல்ஃபோஸ் என்னும் வார்த்தையை மட்டும் வைத்துக் கொண்டு இயேசுவுக்கு உடன் பிறந்த சகோதரர்கள் இருந்தார்கள் என்று கூற முடியாது என்பது தெளிவாகப் புரியும். புதிய ஏற்பாட்டில் இச்சொல்லானது, உடன் பிறந்த சகோதரர்களை குறிக்கவும், ஒன்றுவிட்ட சகோதரர்களை குறிக்கவும், சொந்தம் இல்லாவிட்டாலும் கூட, ஒரு நெருக்கமான தொடர்பை குறிக்கும் சொல்லாகவும், கிறிஸ்துவின் சீடர்களைக் குறிக்கும் சிறப்புச் சொல்லாகவும், பொதுவில் பேசும் போது பிறரைக் குறிப்பிடும் அடைமொழியாகவும் பயன்படுத்தப் பட்டுள்ளது. உதாரணமாக, இயேசுவோடு ஒரு மாலைப் பொழுதை கழித்த புனித அந்திரேயா அடுத்த நாள் தன் சகோதரன் பேதுருவை இயேசுவிடம் அழைத்து வருகிறார் (யோவான் 1:41). இங்கு சகோதரன் என்பதற்கு ஆதல்ஃபோஸ் என்ற சொல்தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. அந்திரேயாவும் பேதுருவும் உடன் பிறந்த சகோதரர்கள் என்பது அனைவரும் அறிந்ததே (மத் 4:18). அதைப் போலவே, செபதேயுவின் மகன் யாக்கோபுவையும் அவர் சகோதரன் யோவானையும் இயேசு அழைக்கிறார். இவர்களும் உடன்பிறந்த சகோதரர்களே. இங்கும் ஆதல்ஃபோஸ் என்ற சொல்லே பயன்படுத்தப்பட்டள் ளது. அதே சமயத்தில், ஏரோது தன் சதோதரனாகிய பிலிப்பின் மனைவி ஏரோதியாவை முன்னிட்டு திருமுழுக்கு யோவானை சிறையிலடைத்திருந்தான் என்று சொல்லப்பட்டுள்ளது (மத் 14:3). ஏரோதுவும் பிலிப்பும் உடன் பிறந்த சகோதரர்கள் அல்ல. மாறாக, அவர்கள் ஒன்றுவிட்ட சகோதரர்களே. இங்கும் சகோதரன் என்பதற்கு ஆதல்ஃ போஸ் என்ற வார்த்தைதான் பயன்படுத்தப்பட்டுள்ளது. இயேசு உயிர்த்த பின், மகதலா மரியாவுக்கு காட்சி கொடுக்கும் போது, இவ்வாறு சொல்கிறார், "நீ என் சகோதரர்களிடம் சென்று அவர்களிடம் 'என் தந்தையும் உங்கள் தந்தையும் என் கடவுளும் உங்கள் கடவுளுமானவ ரிடம் செல்கிறேன்' எனச் சொல்" என்று. இங்கும் சகோதரர் களைக் குறிக்க ஆதல்ஃபோஸ் என்னும் அதே வார்த்தை தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. சகோதரர்கள் என்று இயேசு குறிப்பி டுவது திருத்தூதர்கள் என்பதும், அவர்கள் இயேசுவுக்கு உடன் பிறந்த சதோதரர்கள் அல்லர் என்பதும் அனைவரும் அறிந்ததே. புனித பவுலடியார் எருசலேம் சென்றபோது, அங்கிருந்த சகோதர

சகோதரிகள் அவரை மகிழ்ச்சியோடு வரவேற்றார்கள் என்று குறிப்பிடுகிறார். இந்த சகோதர சகோதரிகள் இயேசுவில் விசுவாசம் கொண்ட சீடர்களைக் குறிக்கிறதே தவிர, அவர்கள் உடன்பிறந்தவர்கள் அல்லர் என்பதும் வெளிப்படையானது. இங்கும் சகோதரர்களைக் குறிப்பதற்கு ஆதல்ஃபோஸ் என்ற வார்த்தை தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதே பயன்பாடு திப 1:15லும் காணப்படுகிறது: ''அப்போது ஒரு நாள், ஏறக்குறைய நூற்றிருபது சகோதரர் சகோதரிகள் ஒரே இடத்தில் கூடியிருக்கும் போது...'' 120 பேரும் உடன்பிறந்த சகோதர சகோதரிகளா? புனித பேதுரு, யூதர்களுக்கு போதிக்கிறபோது, ''சகோதர சகோதரிகளே'' (திப 2:29) என்றுதான் தொடங்குகிறார். அங்கு கூடியிருந்த ஆயிரக்கணக்கான யூதர்கள் நிச்சயம் பேதுருவின் உடன்பிறந்த சகோதரர்கள் அல்லர். எனவே ''சகோதரர்கள்'' (ஆதல்ஃ போஸ்) என்னும் வார்த்தையைப் பிடித்துக் கொண்டு, மாதாவுக்கு வேறு குழந்தைகள் இருந்ததாக யாரும் வாதிட முடியாது.

அடுத்ததாக, மரியாள் தன் தலைமகனை (கிரேக்க மொழியில் ப்ரோத்தோதோகோஸ் ஸ்ரீ (prototokos) பெற்றெடுத்தார் என்று லூக்கா குறிப்பிட்டுள்ளதால் (2:7), மரியாளுக்கு வேறு பிள்ளைகள் இருந்திருக்க வேண்டும் என்று வாதிடுவோரும் உண்டு. நற்செய்தியாளர் இங்கு தலைமகன் என்று குறிப்பிடுவ தால், பின்னர் மரியாள் வேறு குழந்தைகளைப் பெற்றெடுத்தார் என்று வாதிடுபவர்கள் விவிலியத்தை அறியவில்லை என்று தான் பொருள். யூத சமூகத்தில் தலைமகன் என்பது பல குழந்தைகளில் முதல் குழந்தையைக் குறிக்கும் ஒரு சொல் அல்ல. அவ்வார்த்தைக்கு சமய மற்றும் சட்ட அர்த்தங்கள் உண்டு. அவர்களது விடுதலை மற்றும் மீட்பின் வரலாற்றில் தலைமகனுக்கு என்று ஒரு சிறப்பிடம் உண்டு. விப 13:1-2ல் இவ்வாறு படிக்கிறோம்: ஆண்டவர் மோசேவை நோக்கி உரைத்தது: ''தலைப்பேறு அனைத்தையும் எனக்கு அர்ப்பணம் செய் இஸ்ரயேல் மக்களிடையே மனிதரிலும் கால் நடைகளிலும் கருப்பையை திறக்கும் எல்லாத் தலைப்பேறும் எனக்குரியவை'' என்றார். தொடர்ந்து 12ம் வசனத்தில், ''கருப்பையை திறக்கும் தலைப்பேறு அனைத்தும் ஆண்டவருக்கென ஒப்புக்கொடுக் கப்படவேண்டும்'' என்றும் சொல்லப்பட்டுள்ளது.

எனவே யூத சமூகத்திலும் சமயத்திலும் தலைமகன் என்பது முதலில் பிறந்தது என்று எண்ணிக்கையைக் குறிப்பதைக் காட்டிலும், முதலில் தாயின் கருப்பையை திறந்தவன் என்ற பொருளையே தருகிறது. எனவே, தலைமகன் என்றால் அதனைத் தொடர்ந்து பின்னர் குழந்தைகள் பிறந்தன என்று விவிலியத்தின் அடிப்படையில் கூற முடியாது. உதாரணமாக, எண் 3:40ல் ஆண்டவர் மோசேவிடம் கூறுகிறார்: ''இஸ்ரயேல் மக்களில் ஒரு மாதமும் அதற்கு மேலுமான தலைப்பேறான ஆண்கள் அனைவரையும் அவர்கள் பெயர்கள் வாரியாக கணக்கெடு.'' இங்கு, பிறந்த ஒரு மாதமே ஆன குழந்தையும் தலைப்பேறு என்றுதான் அழைக் கப்படுகிறது. ஒரு மாதமே ஆன குழந்தையை தலைப்பேறு என்று சொல்லும்போது, அதற்கு பின்னர் அப்பொழுது அந்த ஒரு மாத குழந்தைக்கு உடன்பிறந்த சகோதர சகோதரிகள் இருந்ததாக யாராவது கூற முடியமா? எனவே, நற்செய்தியாளர் லூக்கா இயேசுவை தலைமகன் என்று குறிப்பிடுவது (2:7), அக்குழந்தைக்குரிய சிறப்புக் கடமைகளை அதன் பெற்றோர்கள் நிறைவேற்ற வேண்டியதன் அவசியத்தை எடுத்துச் சொல்வதற்காகவே என்பதை, அக்கடமையை பெற்றோர்கள் நிறைவேற்றுவதை அவர் குறிப்பிடுவதிலிருந்து (2:22-24) நம்மால் தெள்ளத் தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. எனவே மரியாளின் தலைமகன் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் அவருக்கு வேறு குழந்தைகள் இருந்தது என்று கூறிவிட முடியாது. மேலும், மாதாவுக்கு இயேசுவைத் தவிர வேறுபிள்ளைகள் இல்லை என்பதை, விவிலியத்தின் அடிப்படையில் பின்வருமாறும் கூறலாம்.

இயேசுவுக்கு பன்னிரண்டு வயது நடக்கும் வரை, வேறு பிள்ளைகள் மாதாவுக்கு இல்லை. அப்படி இருந்திருந்தால், அவர்களும் எருசலேம் சென்றிருப்பார்கள். இயேசுவுக்கு முப்பத்து மூன்று வயது நடக்கும் போதும், வேறு பிள்ளைகள் இருந்திருக்க வாய்ப்பில்லை. அப்படியிருந்திருந்தால், சிலு வையின் அடியில் தங்கள் அண்ணன் துன்புறும் வேளையில், தன் தாயோடு நின்றிருப்பார்கள். மாற்கு 6:3ன் படி, இயேசுவுக்கு நான்கு சகோதரர்கள் (யாக்கோபு, யோசே, யூதா, சீமோன்) மற்றும் சகோதரிகள் இருப்பதாக ஊரார் சொல்கின்றனர். அப்படியானால், அவர்கள் அனைவரும் 33 வயதில், இயேசு இறந்த பின்னரா மரியாளுக்கு பிறந்திருக்க முடியும்? மரியாளுக்கு இயேசுவைத் தவிர வேறு பிள்ளைகள் இல்லை என்பதை இன்னொரு விதத்திலும் வாதிடலாம். இயேசுவின் சகோதரர்கள் என்றுதான் நற்செய்தியாளர்கள் குறிப்பிட்டுள்ளார் களே தவிர, ஓர் இடத்தில்கூட, தவறியும், மரியாளின் பிள் ளைகள் என்று யாரையும் குறிப்பிடவில்லை. திப 1:14ல்கூட, ''அவர்கள் (திருத்தூதர்கள்) அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய தாய் மரியா வோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்'' என்று தான் குறிப்பிடப் பட்டுள்ளது. ஏன் இயேசுவின் சகோதரர்களையும் அவரின் தாயையும் தனித்தனியாக குறிப்பிட வேண்டும்? இயேசுவின் தாய் மரியாவோடும் அவளது குழந்தைகளுடனும் என்று தெளிவாகச் சொல்லியிருக்கலாமே? இதிலிருந்தே தெரிகிற தல்லவா, மாதாவுக்கு இயேசுவைத் தவிர வேறு பிள்ளைகள் இல்லை என்று. எனவே விவிலியத்தில் மாதாவின் கன்னித் தன்மைக்கு எதிராக எதுவும் இல்லை என்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறதல்லவா!

அப்படியானால், யார் இந்த இயேசுவின் சகோதரர்கள்? இயேசு வுக்கும் அவர்களுக்கும் என்ன உறவு? எதனால் அவர்கள் இயேசுவின் சகோதரர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்? இயேசுவோடும் அவரது தாய் மரியாளோடும் அவர்களுக்கிருந்த நெருங்கிய தொடர்பையும் உறவையும் எவரும் மறுக்க முடியாது. கானாவூர் திருமணத்திற்குப் பிறகு, மரியாள், இயேசு அவரது சீடர்கள், மற்றும் சகோதரர்கள் அனைவரும் சேர்ந்து கப்பர்நாகும் சென்று ஒன்றாக தங்கியிருக்கின்றனர் (யோவான் 2:12). மரியாளோடு சேர்ந்து அவர்கள் இயேசுவைத் தேடி வருகின்றனர் (மாற்கு 3:31). தூய ஆவியாரின் வருகைக்காக திருத்தூதர்களோடும் மரியாளோடும் இணைந்து செபத்தில் ஈடுபடுகின்றனர் (திப 1:14 1கொரி 9:5). தொடக்கத் திருச்சபையில் குறிப்பாக இயேசுவின் சகோதரரான புனித யாக்கோபு முக்கிய பங்காற்றுகிறார். புனித பவுலடியார் தான் மனமாற்றம் அடைந்ததும் எருசலேமில் இயேசுவின் சகோதரரான

யாக்கோபுவை சந்தித்தாகக் கூறுகிறார் (கலா 1:19). எருசலேம் திருச்சங்கத்தில் யாக்கோபு உரையாற்றுகிறார் (திப 15:13). யார் இந்த யாக்கோபு? மாற்கு 6:3 இயேசுவுக்கு நான்கு சகோதரர்களும் சகோதரிகளும் இருப்பதாகக் கூறப்பட்டுள்ளது: யாக்கோபு, யோசே, யூதா மற்றும் சீமோன். யோவான் 19:25ன்படி, இயேசுவின் சிலுவை அருகில் இயேசுவின் தாயும், தாயின் சகோதரியும் குளோப்பாவின் மனைவியுமான மரியாவும், மகதலா மரியாவும் நின்று கொண்டிருக்கின்றனர். குளோப்பாவின் மனைவி மரியாளும் இயேசுவின் தாய் மரியாளும் சகோதரிகளாக சொல்லப்பட்டுள்ளனர். மாற்கு 15:40, 47ன்படி சின்ன யாக்கோபு, யோசே ஆகியோரின் தாய் மரியா, மகதலா மரியா மற்றும் சலோமி ஆகிய பெண்களோடு இணைந்து தொலைவிலிருந்து சிலுவையில் உயிர்விட்ட இயேசுவை உற்று நோக்கிக் கொண்டிருக்கிறாள். இவற்றை ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது, யோவான் நற்செய்தியில் கூறப்படும் (19:25) குளோப்பாவின் மனைவி மரியாவும், மாற்கு நற்செய்தியில் சொல்லப்படும் யாக்கோபு மற்றும் யோசேப்பின் தாய் மரியாவும் (15:40) ஒரே நபரைக் குறிக்கலாம்.

மாற்கு 6:3ல் காணப்படும் நான்கு சகோதரர்களில் யாக்கோபு மற்றும் யோசேப்பின் பெயர் கூறப்பட்டுள்ளது. இவற்றை யெல்லாம் சேர்த்து வைத்து பார்க்கும்போது, இயேசுவின் சகோதரர்கள் என்று கூறப்படும் யாக்கோபு, யோசேப்பு ஆகிய இருவரும் குளோப்பா மற்றும் அவரது மனைவி மரியாவின் மகன்களே தவிர, இயேசுவின் தாய் மரியாளின் குழந்தைகள் அல்ல என்றே தெரிகிறது. அப்படியானால், இவர்கள் எப்படி இயேசுவின் சகோதரர்கள் என அழைக்கப்படுகிறார்கள் என்பதற்கு ஊகத்தின் அடிப்படையில்தான் பதில் சொல்ல வேண்டியுள்ளது. ஒரே பெற்றோர்களின் இரு பிள்ளைகளுக்கு ஒரே பெயரை சூட்டுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதால், யாக்கோபின் தாய் மரியா இயேசுவின் தாய் மரியாளின் உடன்பிறந்த சகோதரியாக இருக்க சாத்தியமில்லை. அதே சமயத்தில் யோவான் இவர்கள் இருவரையும் சகோதரிகள் என்று கூறுவதால், இவர்கள் பெரியப்பா, சித்தப்பா உறவு முறை களில் வந்த சகோதரிகளாக இருக்கலாம். இது ஒருவகையான சாத்தியம். அல்லது குளோப்பா மரியாளின் கணவர் யோசேப் பின் சகோதரராக இருந்திருக்கலாம். இதனால் குளோப்பா மற்றும் அவரது மனைவி மரியாளின் குழந்தைகள் இயேசுவின் சகோதரர்களாக இருக்கலாம்.

இக்கூற்று உண்மையாக இருப்பதற்காக வாய்ப்புகள் உண்டு. ஏனெனில் யோவான் 7:3-4ல் இயேசுவின் சகோதரர்கள் அவரிடம் கூறுகிறார்கள்: ''நீர் இவ்விடத்தைவிட்டு யூதேயா செல் லும். அப்போது உம் சீடர்கள் நீர் புரியும் செயல்களைக் காண முடியும். ஏனெனில், பொது வாழ்வில் ஈடுபட விரும்பும் எவரும் மறைவாக செயல்புரிவதில்லை. நீர் இவற்றையெல்லாம் செய்வ தால் உலகுக்கு உம்மை வெளிப்படுத்தலாமே.'' பொதுவாக யூத சமூகத்தில் இளையோர் பெரியோருக்கு ஆலோசனையோ, அறிவுரையாக வழங்குவதில்லை. இங்கே இயேசுவின் சகோதரர்கள் கூறுவது வெறும் பரிந்துரையாக மட்டும் தெரியவில்லை. அதிலே ஒரு அழுத்தம் இருப்பது போல் தோன்றுகிறது. எனவே இயேசுவின் சகோதர்கள் அவரது தாய் மரியாளுக்கு பிறந்தவர்கள் அல்ல என்பதும், அதனால் மரியாள் என்றும் கன்னி என்பதும் தெளிவாகிறது அல்லவா? மேலும், மரியாள் என்றும் கன்னி என்பது திருச்சபையில் இன்று நேற்று ஏற்பட்ட ஒரு நம்பிக்கை அல்ல. புனித ஜெரோம், தெர்த்தூலியன் (ஏறக்குறைய 2ஆம் 3ஆம் நூற்றாண்டு) காலத்திலிருந்தே நிலவி வருகிறது. இப்பொழுது, ஏன் மாதாவுக்கு மரியாதை கொடுக்க வேண்டும் என்பதை பார்ப்போம்.

## 1. மீட்பின் திட்டத்தில் முன் குறிக்கப்பட்டவள் அன்னை மரியாள்

விவிலியத்தின் அடிப்படையில் பார்க்கும் போது, மரியாளையும் மீட்பின் திட்டத்தையும் பிரிக்க முடியாது. இதற்கு என்ன விவிலிய ஆதாரம்? ஆதாம் ஏவாள் பாவம் செய்த பிறகு, கடவுளுக்கு எதிராக, அவர்களைக் தூண்டிய பாம்பின் வடிவில் வந்த சாத்தானை, கடவுள் இவ்வாறு சபிக்கிறார்: ''உனக்கும் பெண் ணுக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும், பகைமையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத் தும். நீ அதன் குதிங்காலை காயப்படுத்துவாய்'' (தொநூ 3:15). கடவுளின் இவ்வாக்கு நிறைவேறுவதை திருவெளிப்பாடு எடுத்தியம்புகிறது. ஒரு பெண்ணுக்கும் அரக்கப் பாம்புக்குமிடையே நடைபெறும் இறுதிக்கால போராட்டமாக அதை சித்திரிக்கின்றது (திவெ 12). வித்து இயேசுவைக் குறிக்கிறது என்றால், அங்கு சொல்லப்படும் பெண் மரியாளாகத் தானே இருக்கமுடியும்? ''வித்து'' இயேசு என்று ஏற்றுக் கொள்பவர்கள், அந்த பெண் மட்டும் மரியாள் அல்ல என்று மறுப்பது எப்படி சாத்தியம்? மேலும், மீட்பரின் பிறப்பை எசாயா முன்னறிவிக்கிற போதும், ஒரு பெண்ணைப்பற்றி குறிப்பிடுகிறார்: ''இதோ கன்னி கருத் தாங்கி ஒரு மகனைப்பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு 'இம்மா னுவேல்' என்று பெயரிடுவார்'' (எசாயா 7 :14). யார் அந்த இளம் கன்னிப்பெண்? அதற்கானப் பதிலை லூக்கா தருகிறார்: ''ஆறாம் மாதத்திலே, கபிரியேல் என்னும் வானதூதரை, கடவுள் நாச ரேத்து என்னும் ஊரிலிருந்த ஒரு கன்னியிடம் அனுப்பினார் » (லூக் 1 :26). மேலும், எசாயாவின் இந்த இறைவாக்கு இயே சுவின் பிறப்பில் நிறைவேறுவதை, மத்தேயு தன் நற்செய்தியில் மேற்கோளிட்டுக் காட்டுகிறார் (மத் 1:22-23). இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறது, எசாயா முன்னுரைத்த அந்தக் கன்னிப்பெண் மரியாள் தான் என்று. புனிதபவுலடியாரும் இதையே, ''காலம் நிறைவேறியபோது, திருச்சட்டத்திற்கு உட் பட்டிருந்த நம்மை மீட்டுத் தம் பிள்ளைகள் ஆக்குமாறு கடவுள் தம் மகனைப் பெண்ணிடம் பிறந்தவராகவும், திருச்சட்டத்திற்கு உட்பட்டவராகவும் அனுப்பினார்'' என்று சுட்டிக்காட்டுகிறார் (கலாத் 4:4-5). ஒரு குழந்தை பெண்ணிடம்தானே பிறக்க முடியும்? இது புனித பவுலின் காலத்தில் இருந்தவர்களுக்குத் தெரியாதா? பின்னர் ஏன் அவ்வாறு கூறவேண்டும்? இவ்வாறு, மீட்பின் திட்டத்தையும் அந்த குறிப்பிட்ட பெண்ணையும் பிரிக்க முடியாது என்பதை விவிலியம் தெள்ளத்தெளிவாக எடுத்தியம்புகிறது. அந்தப் பெண் மரியாள் தான் என்பது, கிறிஸ்துவை அறிந்திருப் பவர்களுக்கு நன்றாகப் புரியும். அதுவும் விவிலியம் படிப்பவர்க ளுக்கு இன்னும் நன்றாகவே புரியும். எனவே, மீட்பின் வர லாற்றில், மரியாளின் பங்கு என்பது தற்செயலாக நடந்த ஒரு காரியமல்ல. குறிப்பிட்ட காலத்திற்கென ஒழுங்கு செய்யப்பட்ட தற்காலிகமான ஏற்பாடும் அல்ல் எதிர்பாராமல் நிகழ்ந்த ஒரு விபத்தும் அல்ல. காலப்போக்கில் உருவான ஓர் திட்டமும் அல்ல. மாறாக, அது பழைய ஏற்பாட்டில், இறைவனால் முன்குறிக்கப்பட்டது. இறைவாக்கினர்களால் முன்னறிவிக்கப்



பட்டது. அதுவும், பாவம் செய்த மனிதனை மீட்க வேண்டும் என்று கடவுள் நினைத்த போதே, ஆதாம் காலத்திலேயே, கடவுளால் தீட்டப்பட்டதிட்டம். புதிய ஏற்பாட்டில் அத்திட்டம் நிறைவேறியதாக சுட்டிக்காட்டப்படுகிறது. எனவே, மரியாளை மறுப்பவர்களும் வெறுப்பவர்களும் மரியாளை அல்ல, கடவுளையும் அவரது மீட்பின் திட்டத்தையும் தான் கேள்விக்குள்ளாக்குகிறார்கள் என்று விவிலியம் சாட்சியம் சொல்லுகிறது.

## அது மூவொரு இறைவனின் விருப்பம்

மரியாளுக்கு மரியாதை செய்ய வேண்டும், அவளை போற்ற வேண்டும் என்பது திருச்சபையின் கண்டுபிடிப்பு அல்ல. மாறாக, அது மூவொரு இறைவனின் விருப்பம் என்பதையும் விவிலியம் சுட்டிக் காட்டுகின்றது. ''அருள் நிறைந்தவளே வாழ்க! ஆண்டவர் உம்முடனே!'' என்று வாழ்த்தி, மாதாவின் வணக்கத்தை ஆரம்பித்து வைத்ததே புனித கபிரியேல் அதிதூதர்தான் (லூக் 1:28). அதுவும், வானதூதர் தாமாக வரவில்லை. அவரை அனுப்பி வைத்தது தந்தையாம் கடவுளே என்பதையும் லூக்கா குறிப்பிடுகிறார் (லூக் 1:26). வழக்கமாக, மனிதர்கள் தான் கடவுளின் உதவியை நாடுவர். இங்கோ, கடவுள் மனித விருப்பத்தை, சம்மதத்தை தெரிந்து கொள்ள தன் தூதரை அனுப்புகிறார். தூதரே வாழ்த்திய மாதாவை வாழ்த்த மறுப்பவர்கள், தங்களை கபிரியேல் தூதரை விடவும் மேலானவர்கள் என்று எண்ணுவதாகத் தானே கருதமுடியும்? கடவுளின் தூதர்கள் மாதாவை போற்றுகிறார்கள். அப்படியானால், மாதாவைப் போற்றாதவர்கள், அதுவும், மாதாவைத் தூற்றுகிறவர்கள் யாருடைய தூதர்கள் என்பதை கபிரியேல் தூதர்தான் நமக்குச் சொல்ல வேண்டும்.

அடுத்ததாக, ''பெண்களுக்குள் நீர் ஆசி பெற்றவர்! உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே! என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?'' (லூக் 1:42-43) என்று மரியாளை, இயேசுவைப் பெற்றெடுக்கும் முன்னரே, ''ஆண்டவரின் தாயாக'' அறிக்கையிடுகிறாள் புனித எலிசபெத்து. மாதாவுக்கு மட்டுமே தெரிந்த, தூதர் சொன்ன பரம இரகசியம், எப்படி எலிசபெத்துக்குத் தெரிந்தது? நற்செய்தி சொல்லுகிறது, ''எலிசபெத்து தூய ஆவியால் முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டார்'' (லூக் 1:41) என்று. ''கடவுளின் ஆவியால் ஆட்கொள்ளப்பட்டுப் பேசும் எவரும் 'இயேசு சபிக்கப்பட் டவர்' எனச் சொல்ல மாட்டார். தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவரன்றி வேறு எவரும் 'இயேசு ஆண்டவர்' எனச் சொல்ல முடியாது'' (1கொரி 12 :3). அதைப் போலவே, தூய ஆவி நிழலிட்ட மாதாவை (லூக் 1:35), தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்களால் மட்டுமே கண்டுணர முடியும். அப்படியானால், ''ஆவிக்குள் அபிஷேகம் செய்யப்பட்டுள்ளோம்'' எனக் கூறிக்கொண்டு, அதே ஆவியால் பரவசப்பேச்சில் ஈடுபடும் வல்லமை இருப்பதாக மார்புதட்டிக்கொண்டு, மாதாவுக்கு எதிராக பேசுகிறவர்களை பிடித்திருக்கும் ஆவி, தூய ஆவியா அல்லது தீய ஆவியா என்பதை ஆவியானவர்தான் நமக்கு வெளிப்படுத்த வேண்டும். இங்கு மற்றொன்றையும் நாம் கவனிக்க வேண்டும். மேலும், எப்படி மரியாள் ஓர் ஆணின் உறவு இல்லாமலேயே ஒரு குழந்தையை கருத்தரிக்க முடியும்? கபிரியேல் தூதர் சொல்கிறார்: ''தூய ஆவி உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும்'' (லூக் 1:35). இதன் மூலமாக ஓர் இறையியல் செய்தியை லூக்கா மிகவும் நுணுக்கமாகப் பதிவு செய்கிறார். ஆவியான வரைக் குறிப்பிடுவதன் மூலமாக, படைப்பின் தொடக்கத்தை நினைவு படுத்துகிறார். ''தொடக்கத்தில் கடவுள் விண்ணுலகையும் மண்ணுலகையும் படைத்தபொழுது, மண்ணுலகு உருவற்று வெறுமையாக இருந்தது. ஆழத்தின் மீது இருள் பரவியிருந்தது. நீர்த்திரளின் மேல் கடவுளின் ஆவி அசைந்தாடிக் கொண்டிருந்தது'' (தொநூ 1:1-2). ஆவியானவர் அசைவாடுகிறார். அதன் பின்னரே, கடவுள் வார்த்தையின் மூலமாக உலகைப் படைக்கிறார். இது பழைய ஏற்பாடு. புதிய ஏற்பாட்டிலோ, வார்த்தையானவர் கருவாவதற்கு, ஆவியானவர் மரியாளின் மீது நிழலிடுகிறார். இவ்வாறு, மரியாளின் மூலமாக புதியதோர் படைப்பை கடவுள் உருவாக்கப் போகிறார் என்பதை லூக்கா குறிப்பிடுகிறார். மேலும், ''உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும்'' என்று கூறுவதன் மூலமாக, இஸ்ரயேல் மக்களின் விடுதலைப் பயணத்தையும் லூக்கா நினைவுப் படுத்துகிறார். ''ஆண்டவர் பகலில் அவர்களை (இஸ்ரயேல் மக்களை) வழிநடத்த மேகத்தூணிலும், இரவில் ஒளிகாட்ட நெருப்புத்தூணிலும் இருந்தார். பகலிலும் இரவிலும் அவர்கள் பயணம் செய்வதற்காக அவர் அவர்கள்முன் சென்று கொண்டிருந்தார். பகலில் மேகத்தூணும் இரவில் நெருப்புத்தூணும் மக்களை விட்டு அகலவேயில்லை'' (விப 13:21-22). அன்னை மரியாளிடம் தன் மகனைப் பிறக்கச் செய்வதன் வழியாக, கடவுள் புதிய படைப்பையும் விடுதலையையும் தரப் போகிறார் என்பதையே லூக்கா அடிக்கோடிட்டுக் காட்டுகிறார்.

தந்தையாம் கடவுள் தன் தூதரை மரியாளிடம் அனுப்புகிறார். ஆவியாம் இறைவன் அவர்மீது நிழலிடுகிறார். மகனாகிய இறைவனோ சீடர்கள் அவளை தாயாக ஏற்றுக் கொள்ள வேண்டும் ஆசைப்படுகிறார். அதுவும் சாதாரண ஆசை அல்ல. அவரின் கடைசி ஆசை. சிலுவையில், தன்னுயிரை, மனித



மீட்புக்காக பலியாக ஒப்புக் கொடுக்கும் அந்தக் கடைசி தருணத்தில் வெளிப்படுத்திய ஆசை. இயேசு தம் தாயையும் அருகில் நின்ற தம் அன்பு சீடரையும் கண்டு, தன் தாயிடம் "அம்மா, இவரே உம் மகன்" என்றார். பின்னர், தம் சீடரிடம், "இவரே உம் தாய்" என்றார் (யோவான் 19:26-27). கொடூரமான வேதனையின் மத்தியிலும், தனது தாயையும், அன்புச் சீடரையும் நினைவுகூருகிறார். முதலில், தன் தாயிடம் தன் சீடர்களை ஒப்படைக்கிறார். பின்னரே, தன் தாயை சீடரிடத்தில் ஒப்படைக்கிறார். இங்கு தான், இயேசுவுக்கும் அவரது சீடர்களுக்கும் உள்ள பிரிக்க முடியா பிணைப்பு, அவர்கள்மீது இயேசுவுக்கு இருந்த அக்கறை வெட்ட வெளிச்சமாகிறது. தன்னைப் பேணி வளர்த்தது போல, தனக்குப் பிறகு, தன்னுடைய பணியை தொடரவிருக்கும், தன்னுடைய சீடர்களுக்கும் தாயாக இருக்கும்படி முதலில் மரியாளைக் கேட்டுக் கொள்கிறார். தன் மகனுக்குத் தாயாக இருக்கும்படி, 34 ஆண்டுகளுக்குமுன் தந்தையாம் இறைவன் மரியாளிடம் கேட்டார். அவ்வாறு தந்தை கேட்க அடிப்படை, மரியாளின்மீது அவர் வைத்திருந்த நம்பிக்கை. இப்பொழுதோ, மகனாகிய இறைவன், தன் சீடர்களுக்குத் தாயாக இருக்கும்படி கேட்கிறார். இவ்வாறு இவர் கேட்பதற்கு காரணம், அவளிடம் வளர்ந்த அவருடைய தனிப்பட்ட அனுபவம். அதே சமயத்தில், ஏதோ ஒரு சீடரிடத்தில், ஏனோ தானோவென்று, ஏதோ கடமைக்காக, தன் தாயை இயேசு ஒப்படைக்கவில்லை. தன்னுடைய பாடுகளில் பங்கு பெற்ற தன் ஒரே சீடரிடம், சீடர்களின் பிரதிநிதியாக அங்கு நின்று கொண்டிருந்த தன் அன்பு சீடர் யோவானிடம் ஒப்படைக் கிறார். .மரியாளிடம் "நீர் ஒரு மகனைப் பெற்றெடுப்பீர்" என்று கபிரியேல் தூதர் அறிவித்தார். அது நாசரேத்து என்னும் ஒரு சிறு கிராமத்தில், இரகசியமாக நடந்தது. அவள் கருவுற்றது தூய ஆவி நிழலிட்டதால். ஆனால், அவள் "மனுக்குலத்தின் தாய்" என்று தலைநகர் எருசலேமில், கல்வாரி மலையில், பகிரங்கமாக பிரகடனப்படுகிறது. அதைச் செய்வது இயேசு. பெற்றெடுத்ததன் ஒரே மகனை, அதுவும் வெறும் முப்பத்து மூன்றே வயதில், கொடூரமான சிலுவைக் கொலைக்கு கையளிக்கும் தருணத்தில், மனுக்குலத்திற்கே தாயாகும் பாக்கியத்தை, தாயுக்கு மகன் கொடுக்கிறார்.

தன் மகனின் மரணத்தில், இம்மனுக்குலத்தைப் பிரசவிக்கிறாள் தாய் மரியாள். இயேசுவை பெற்றெடுக்க, அவளுக்கு "விடுதியில் கூட" (லூக் 1:7) இடம் கிடைக்கவில்லை. அவள் மனுக் குலத்தின் தாயாகும் திருச்சடங்கும் வீட்டில் அல்ல, ஊருக்கு வெளியே, மலை உச்சியில் தான் நடைபெறுகிறது. இயேசுவின் தாயானது நடு இரவில், கடும் பனியில். மனுக்குலத்தின் தாயானதோ நடுப்பகலில், கடும் வெயிலில். மாதாவை ஏற்றுக் கொள்ளாதவர்கள், இயேசுவின் கடைசி ஆசையை நிறை வேற்றாதவர்கள் மட்டுமல்ல, அவரது விருப்பத்திற்கு எதிராக செயல்படுகிறவர்களே. "அந்நேர முதல், அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவளித்து வந்தார்" (யோவா: 19:27). இயேசு அன்பு செய்த சீடர், இயேசுவை அன்பு செய்த சீடர், மரியாளை உடனே ஏற்றுக்கொண்டார். அப்படியானால், மரியாளை ஏற்றுக் கொள்ளாதவர்கள், இயேசுவை அன்பு செய்கிறார்களா இல்லையா என்பதை புனித யோவான் தான் நமக்குத் தெரியப்படுத்த வேண்டும். "தன் தலைவரின் விருப்பத்தை அறிந்திருந்தும், ஆயத்தமின்றியும், அவர் விருப்பப்படி செயல்படாமலும் இருக்கும் பணியாளன் நன்றாய் அடிபடுவான்" என்று இயேசுவே கூறியிருக்கிறார் (லூக் 12:47). சுருங்கக்கூறின், தன் மகனின் தாயாகுவதற்காக, மரியாளின் இசைவைப் பெற, கபிரியேல் தூதரை அனுப்பி வைத்தவர், தமதிருத்துவத்தில் முதல் ஆளாகிய தந்தையாம் இறைவன். இயேசுவைக் கருவுற, மரியாளின் மீது நிழலிட்டவர் மூன்றாம் ஆளாகிய தூய ஆவியானவர். சீடர்க ளின் தாயாகவும் மனுக்குலத்தின் தாயாகவும் மரியாளைப் பிரகடனப்படுத்தியவர் இரண் டாம் ஆளாகிய சுதனாகிய இயேசு. எனவே மரியாளை ஏற்கவேண்டும் என்பது மூவொரு இறை வனின் விருப்பம். மரியாளை ஏற்றுக் கொள்ளாதவர்கள், மாதாவுக்கு எதிராக அல்ல, தமதிருத்துவத்தின் விருப்பத்திற்கு எதிராகவே செயல்படுகிறார்கள்.

## இயேசுவின் வாழ்வில் இரண்டற கலந்தவள்

அடுத்ததாக, மாதாவுக்கு சிறப்பு செய்யக் காரணம், அவருக்கும் இயேசுவுக்கும் இருந்த பிரிக்க முடியா உறவு. இயேசுவை கருவறை முதல் கல்லறைவரை தொடர்ந்து சென்ற ஒரே மனித ஜீவன் மரியாள் மட்டுமே. இயேசுக்கு உலகத்தை அறிமுகப் படுத்தியதும், உலகத்தை இயேசுவுக்கு அறிமுகப்படுத்தியதும் அன்னை மரியாளே. தொடக்கத்தில் வார்த்தையாக இருந்தவர், கடவுளோடு இருந்தவர், கடவுளாக இருந்தவர் (யோவான் 1:1), மனுவாகி நம்மிடையே குடிகொள்வதற்கு (யோவான் 1:14), ஓர் ஆணின் உதவி தேவைப்படவில்லை (கலா 4:4). ஆனால் ஒரு பெண்ணின் இசைவு தேவைப்பட்டது. அவள் தான் மரியாள். மேலும், மரியாள் ஆச்சரியமானவள். ஒரு பெண் கருத்தரிப்பது இயல்பு. அதில் அதிசயம் ஏதுமில்லை. ஆனால், ஓர் ஆணின் துணையின்றி அது நடக்குமா? நடக்காது. ஆனால், அது மாதாவில் நடந்தது. ஒரு கன்னிப் பெண் தாயாகலாம். அது இயற்கை. அதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. ஆனால் தாயான பின்னும், ஒரு பெண் கன்னியாக இருக்க முடியுமா? முடியாது. ஆனால் அது மாதாவில் நடந்தது. அவள் உண்மை யில் ஓர் அதிசயத் தாய். இயற்கையின் நியதிகள் கூட அவளுக்கு விதிவிலக்காக அமைந்தன. இன்றும் அவள் தொடர்ந்து காட்சி தந்து கொண்டிருப்பதற்கு காரணமும் அதுதான். அதே சமயம், அவள் தேவதையும் அல்ல, தெய்வமும் அல்ல. ஆனால், கடவுளால் முன்குறிக்கப்பட்ட நாயகி. தான் சாதாரணப் பெண் என்பதையும், தனது பேறுக்கும், பெயருக்கும், பெருமைக்கும்

யார் காரணம் என்பதையும், முற்றிலும் உணர்ந்து வைத்திருந் தாள் அன்னை மரியாள். என்ன காரணம் என்பதை அவளே பாடுகிறாள்: ‘‘அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண் ணோக்கினார்... வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல் பல செய்துள்ளார்’’ (லூக் 1:48-49). ‘‘கடவுளைப் போல ஆக வேண்டும்’’ எனக் கனவு கண்டு, பாவத்தை கருத்தரித் தவள் முதல் பெண் ஏவாள். ‘‘ஆண்டவரின் தாய்’’ என்று தன்னை எலிசபெத்து பாராட்டினாலும், பெருமையில் மிதந்து விடாமல், அது ‘‘ஆண்டவரின் செயலே’’ என்று, ஆண்டவரை முன்னிறுத்தும் எளிய உள்ளம் கொண்டவள் புதிய ஏவாள், அன்னை மரியாள். பாம்பின் சூழ்ச்சிக்குப் பலியானவள் பழைய ஏவாள். பாம்பின் தலையை மிதித்து நின்றவள் புதிய ஏவாள். பாவம் உலகில் நுழைய காரணமானவள் பழைய ஏவாள். மீட்பர் உலகினுள் நுழைய கருவியானவள் புதிய ஏவாள். தன்னிலை உணர்ந்தவள் மரியாள். ‘‘இதோ ஆண்டவரின் அடிமை’’ என்று கபிரியேல் தூதர் வழியாக, கடவுளுக்கு தன்னை அர்ப்பணித்தவள், ‘‘தாழ்நிலை நின்ற தம் அடிமையை கண்ணோக்கினார்’’ என்று சொல்லி தன் அர்ப்பணத்தை மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்துகிறாள்.

‘‘என் ஆண்டவரின் தாய்’’ என்று அவளை வாழ்த்துகிறாள் எலிசபெத்து. ‘‘நான் ஆண்டவரின் அடிமை’’ என்று தன்னைத் தாழ்த்துகிறாள் மரியாள். சிலுவைச்சாவை ஏற்கும் அளவுக்கு, இயேசு தன்னை தாழ்த்தினார். கடவுளோ, ‘‘அனைவருக்கும் மேலான பெயரை’’ அவருக்கு வழங்கினார் (பிலி 2:6-11). அதைப் போலவே, மரியாள் தன்னை “தாழ்நிலை நின்ற ஆண் டவரின் அடிமையாக” தாழ்த்தியதால், ‘‘எல்லா தலையினரும் பேறுடையாள்’’ என போற்றும் பாக்கியத்தை, கடவுள் அவருக்கு வழங்குகிறார். லூர்து போன்ற அன்னையின் திருத்தலங்களில் அலைமோதும் மக்கள் கூட்டம், அன்னை மரியாளின் இந்த இறைவாக்கு நிறைவேறிக் கொண்டிருப்பதற்கு சாட்சியம் பகர்கின்றது. அவளது தாழ்ச்சியே அவளது மகிமைக்கு அடிக்கல்லாக அமைகிறது. அவள் சாதாரணபெண் தான். ஆனால், அசாதரணமான முறையில் விசுவாச வாழ்க்கையை நடத்திக் காட்டியவள். பெருமையை அவள் தேடிச்செல்லாததால், பெருமையெல்லாம் அவளைத் தேடி வந்தன. அவள் நாடியதும், தேடியதும் கடவுளையும் அவரது திருவுளத்தையும் மட்டுமே. அவள் ஓடியது குழந்தை இயேசுவை காப்பாற்ற மட்டுமே. அவள் விரைந்து சென்றது பிறருக்கு சேவை செய்ய மட்டுமே. அவள் பாடியதெல்லாம் இறைசெயலை மட்டுமே. ‘‘முதலில் இறையரசையும் அதற்கு உரியவற்றையும் நாடுங்கள். மற்றவையெல்லாம் உங்களுக்கு சேர்த்துக் கொடுக்கப்படும்’’ (மத்6:33) என்ற இயேசுவின் போதனைக்கு முழுமையான எடுத்துக்காட்டு அன்னை மரியாள். எனவே, இயேசுவின் போதனைகளை எப்படி வாழ்வாக்க வேண்டும் என்பதற்கு மரியன்னை நல்லதோர் எடுத்துக்காட்டாக அமைகிறாள்.

## இயேசுவுக்காக துன்பங்களை அனுபவித்தவள்

அடுத்தாக, இயேசுவை முன்னிட்டு அதிகமான துன்பங்களை அனுபவித்தவள் அன்னை மரியாள். இயேசுவின் சீடர்களோ, அல்லது மறைசாட்சிகளோ, இயேசுவின் இறப்புக்குப் பிறகுதான் துன்பத்தை அனுபவித்தார்கள். புனித சூசையப்பர் கூட, இயேசு பிறந்தபின் தான், இயேசுவுக்காக சவால்களையும் சங்கடங்க ளையும் சந்திக்க நேர்ந்தது. ஆனால், இயேசு பிறக்கும்முன்னே, அவர் கருவாக உருவான நாள்தொட்டே, அவருக்காகத் துன்பங் களைத் தாங்கியவள் மரியாள் மட்டுமே. இயேசு கருவான பின், முதலில் யோசேப்பு அவளை மறைவாக விலக்கிவிட திட்டமிடு கிறார். பின்னர், நிறைமாத கர்ப்பினியாக, பெத்லகேமுக்குப் பயணம் செல்லும் துயரம். அங்கு பேறுகாலம் வருகிறது. அதற்காக பெத்லகேம் வீதிகளில் இடம் தேடி அலையும் அவலம். விடுதியில் கூட, அவர்களுக்கு இடம் கிடைக்காத துர்ப்பாக்கியம். மாட்டுத் தொழுவத்தில் குழந்தையைப் பெற்றெடுக்கும் தரித்திரம். தெய்வக் குழந்தையை பாதுகாக்க இரவோடு இரவாக எகிப்துக்கு ஓடவேண்டிய நிர்ப்பந்தம். அகதியைப் போல் அங்கும் இங்கும் அலைய வேண்டிய ஒரு தர்மச்சங்கடம். யாருக்காக? எல்லாம் பாலன் இயேசுவுக்காக.

பின்னர் குழந்தைக்குரிய யூதச் சடங்கு முறைகளை செய்ய வேண்டியிருந்தது. ஆண்டவருக்கு அர்ப்பணிக்க, குழந்தையை எருசலேம் ஆலயம் கொண்டு வருகிறார்கள். அங்கோ, சிமி யோன் என்னும் இறைவாக்கினர், குழந்தையை ‘‘எதிர்க்கப் படும் அடையாளம்’’ என்கிறார். ‘‘உமது உள்ளத்தை ஒரு வாள் ஊடுருவிப்பாயும்’’ (லூக் 2:35) என்று மாதாவைப் பார்த்தும் சொல்கிறார். இயேசுவின் பணிக்கும் மரியாளின் வாழ்விற்கும் உள்ள நெருங்கிய தொடர்பை சிமியோனின் இந்த இறைவாக்கு வெளிப்படுத்துகிறது. இயேசுவின் பணியை முன்னிட்டு, அவள் அனுபவிக்கவிருக்கும் பாடுகளை அது முன்னறிவிக்கிறது. குழந் தைக்கு பன்னிரண்டு வயதாகிறது. வழக்கப்படி, பாஸ்கா விழா வைக் கொண்டாட, குடும்பமாக எருசலேம் செல்கிறார்கள். ஆனால், திரும்பும்போது, குழந்தையைக் காணாமல் பரிதவிக் கிறார்கள். மூன்று நாட்களாக ஏக்கத்தோடு தேடிக் கொண்டே, மீண்டும் எருசலேம் வருகிறார்கள். ஆலயத்தில் குழந்தையை கண்டு பிடிக்கிறார்கள் (லூக் 2:41-52). எதற்காக இந்த அலைச் சல்? யாருக்காக இந்த பரிதவிப்பு? அனைத்தும் குழந்தை இயேசுவுக்காக.

மகனுக்கு முப்பத்து மூன்று வயது தான். ஆனால், சிலுவையில், கொடூரமான முறையில், ஆடை பறிக்கப்பட்டு அவமானச் சின்னத்தைப்போல, பொல்லாத கயவனைப் போல் இரண்டு கள்வர்களுக்கு நடுவில், தலையில் முள்முடி தரித்தவராய், கை கால்களில் ஆணிகள் அறையப்பட்டவராய், வருவோர் போவோர் எல்லாம் எள்ளி நகையாட, இரத்தம் வடிய வடிய வேதனையுறும், தன் வாலிப மகனை பார்க்கிற ஒரு தாயின் உள்ளம், என்ன பாடுபட்டிருக்கும்? எப்படி துடிதுடித்திருக்கும்? இதை ஒருகணம் யோசிக்கும் எந்த ஒரு பெண்ணுக்கும், மாதாவுக்கு எதிராகப் பேச நாவு எழுமா? அப்படி எழுந்தால், அவள் உண்மையான பெண்மனம் படைத்தவளாக இருக்க முடியுமா? இதை தியானிக்கும் எந்த ஒரு ஆண் மகனுக்கும், மாதாவுக்கு எதிராகப் பேச மனம் வருமா? அப்படி வந்தால், அவர்களிடம் இருப்பது உண்மையிலேயே மனித மனம்தானா? இயேசு மாபெரும் புதுமைகளைச் செய்த போது, அவர் பின் செல்லாத தாய், இயேசுவின் பின் மக்கள் கூட்டம் கூட்டமாக அலை மோதியபோது, அவர் அருகில் இல்லாத தாய், பாடுகளின் போது மட்டும் பாய்ந்து வருகிறாரே! உடனிருக்கிறாரே! அதுதானே உண்மையான தாய்மையின் அடையாளம்!

இயேசுவின் சாவு வயதான காலத்தில் நிகழ்ந்த இயற்கையான மரணம் அல்ல. சிகிச்சை பலனளிக்காமல் நடக்கும் நோய்வாய்ப் பட்ட மரணமும் அல்ல. அல்லது திடீரென்று எதிர்பாராமல் நேர்ந்த விபத்தினால் ஏற்பட்ட மரணமும் அல்ல. அது சாவல்ல, ஒரு கொலை. அணுஅணுவாக, சித்ரவதை செய்து, அவமானப்படுத்தி, அவரது உள்ளத்தையும் உடலையும் நோகச் செய்த பின்னர் அரங்கேற்றப்பட்ட பயங்கரமான கொலை. பட்டப்பகலில், எருசலேம் நகரத்தார் அனைவரின் கண் முன்னும் நடந்தேறிய பகிரங்கமான கொலை. நெடுநாள் திட்டமிடப்பட்ட கொலை. சமயத் தலைவர்களும் அரசியல் தலைவர்களும் கைகோர்த்து சேர்ந்து நடத்திய கொலை. இப்படி, ஊரே மகனுக்கு எதிராக திரண்டு நிற்கும்போது, கடவுளின் திட்டத்தை உணர்ந்தவளாய், "சீடர்கள் உன்னைவிட்டு ஓடினால் என்ன? ஊரே உனக்கு எதிராக நின்றாலும் என்ன? யார் என்ன சொன்னால் என்ன? எவர் எதைச் செய்தால் என்ன? கலங்காதே மகனே! நான் உன்னோடு" என்று, கண்ணீர் மல்க கூறும் மரியாளின் இதயத் துடிப்பு யாருக்கு கேட்டதோ இல்லையோ, இயேசுவுக்கு நன்றாகவே கேட்டது. எனவேதான், அருகில் நின்ற சீடரிடம் "இதோ உன் தாய்" என்கிறார். "இதோ உமது உள்ளத்தையும் ஒரு வாள் ஊடுருவும்" என்ற சிமியோனின் இறை வார்த்தை நிச்சயமாய் அன்னையின் காதுகளில் எதிரொலித்திருக்கும். இயேசுவைக் கருவுற்ற முதலே கல்வாரி நோக்கி பயணம் தொடர்ந்த வியாகுலத் தாய் அவள். "என் பின்னே வர விரும்புகிறவன், தன் சிலுவையை சுமந்து கொண்டு என்னைப் பின் தொடரட்டும்" (மத் 16:24) என்ற இயேசுவின் அறைகூவலை முதலில் முழுமையாக வாழ்வாக்கி யவள் அன்னை மரியாள். இவ்வாறு, இயேசுவை பிறப்பிலும் இறப்பிலும் நேரிடையாகப் பார்த்ததும், அருகிருந்ததும், அதனால் பாதிக்கப்பட்டதும், அவருக்காக, கருவுற்ற நாள் தொடங்கி கல்வாரிச் சாவு வரை துன்பங்களை அடைந்ததும் அவள் மட்டுமே. அவளது சாட்சியத்தை ஏற்காதவர்கள், அவளது தியாகத்தை உணராதவர்கள், எப்படி இயேசுவின் பாடுகளை உணரமுடியும்? இயேசுவுக்கு சீடர்களாக இருக்க முடியும்? அவரது பாடுகளில் பங்கெடுக்க முடியும்? அவருக்கு நன்றியுள்ள வர்களாக வாழ முடியும்?

இயேசுவின் செயலைப் பார்த்தவர்கள், அவரின் போதனை யைக் கேட்டவர்கள் எல்லாம் மரியாளை நினைவு கூர்ந்தார்கள். அவளைப் புகழ்ந்தார்கள். உதாரணமாக, இயேசுவின் வல்ல செயல்களைக் கண்டு வியந்தவர்கள், "இவர் மரியாளின் மகன் தானே!" என்றார்கள் (மாற்கு 6:3). இது இயேசுவின் சொந்த ஊர் மக்கள் சொன்னது. எனவே, அவரது தாயின் பெயர் மரியா என்று அவர்களால் தெளிவாகக் கூற முடிந்தது. மற்றொரு நாள், இயேசு போதித்துக் கொண்டிருக்கும் போது, கூட்டத்திலிருந்த பெண் ஒருவர் "உம்மைக் கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறு பெற்றவர்" என்று குரலெழுப்பிக் கூறுகிறார் (லூக் 11:27). இயேசுவோ, இன்னும் ஒருபடி மேலே சென்று, ''இறைவார்த்த தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறுபெற்றோர்" (லூக் 11:28) என்கிறார். இயேசு பொதுவாகச் சொன்ன இதே வார்த்தைகளைத் தானே, மரியாளை போற்றுகிற போது எலிசபெத்தும் சொன்னாள், "ஆண்டவர் உமக்குச் சொன்னவை நிறைவேறும் என்று விசுவசித்த நீர் பேறு பெற்றவரே!" (லூக் 1:45). இயேசுவின் சொந்தக்காரி எலிசபெத்து மட்டுமல்ல, மரியாளைப் பற்றி எதுவும் தெரியாதவர்கள் கூட அவளைப் பாராட்டினார்கள். அவர்கள் மரியாளைப் போற்றுவதற்கு, எல்லாத் தாய்மார்களையும் போல, அவள் இயேசுவைப் பெற்றெடுத்து, பாலூட்டிய ஒரு செயலே போதுமானதாக இருந்தது.

## சீடத்துவத்தின் இலக்கணம் மரியாள்

மரியாள் இயேசுவின் தாய் மட்டுமல்ல, இயேசுவின் முதல் மற்றும் முழுமையான சீடரும் கூட. இயேசுவின் போதனைக ளுக்கு முழு வடிவம் கொடுத்தவள் அன்னை மரியாள். முழுமை யான அர்ப்பண உணர்விற்கு உன்னதமான எடுத்துக்காட்டு அன்னை மரியாள். தனது அறிவிற்கு அப்பாற்பட் டதாக இருந்தா லும், ''கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை'' (லூக் 1:37) என்று கபிரியேல் தூதர் சொன்னதும், ''இதோ ஆண்டவரின் அடிமை'' (லூக் 1:38) என்று தன்னை முழுமையாக அர்ப்பணித்தவள் அன்னை மரியாள். விவிலியத்தில் கடவுளின் அழைப்பு ஒரு வரின் பிழைப்புக்காக அல்ல. கடவுள் ஒரு மனிதரைத் தேர்ந் தெடுப்பது, தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த நபரின் ஆதாயத்துக்காக அல்ல.

அது அந்நபருக்கு கொடுக்கப்படும் சிறப்புச்சலுகையும் அல்ல. மாறாக, அது அவர்களிடம் ஒப்படைக்கப்படும் மாபெரும் பொறுப்பு. அது சவால்கள் நிறைந்த உன்னதமான பணி. அன்போடும் அர்ப்பணத்தோடும், பொறுப்போடும் உரித்தோடும் ஆற்றவேண்டிய மாபெரும் கடமை. அது ஒரு மனிதனின் தனிப் பட்ட திறமைகளையோ, அவரது குடும்ப கௌரவத்தையோ, அவரின் சமூக அந்தஸ்தையோ அடிப்படையாக வைத்து, மனிதர்கள் கேட்டுப் பெறும் உரிமை அல்ல. அது இறைவனின் தனிப்பட்ட அருட்கொடை. இறைவன் யாரை அழைக்கிறார் என்பது முக்கியமல்ல. அழைக்கப்பட்டவர் கடவுளோடு இருக்கி றாரா, கடவுளின் பணிக்கு உண்மையாக நடக்கிறாரா என்பது தான் முக்கியம். அழைக்கப்பட்ட ஒரு மனிதனின் வெற்றி என்பது, சமூக அங்கீகாரத்தில் அல்ல, இறை அர்ப்பணிப்பில் அடங்கியுள்ளது. மனிதரின் நல்லெண்ணத்தை மட்டும் தேடுப வர்கள், அவர்களுக்கு உகந்தவர்களாக இருக்க ஆசைப்படுப வர்கள், கிறிஸ்துவின் பணியாளனாக இருக்க முடியாது என்பது புனித பவுலடியாரின் மறைபணிக்கான அளவுகோல் (கலா 1:10). இறையழைத்தலின் இலக்கணங்களுக்கு உன்னதமான எடுத் துக்காட்டாக வாழ்ந்தவர் அன்னை மரியாள். "என் கடவுளே, உமது திருவுளத்தை நிறைவேற்ற, இதோ வருகிறேன்" என்று சங்கீத ஆசிரியர் தன்னை அர்ப்பணிக்கிறார் (திபா 40:6-8 எபி 10:7). "இதோ நானிருக்கி றேன். என்னை அனுப்பும்" (எசா 6:8) என்று எசாயா இறை வாக்கினர் தன்னை கையளிக்கிறார். மரியாள் இன்னும் ஒரு படி மேல் சென்று, "இதோ நான் ஆண்டவரின் அடிமை! உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்" என்கிறாள். அடிமை என்றால் யார்? ஒரு அடிமைக்கு கடமைகள் உண்டு, ஆனால் உரிமைகள் இல்லை.

ஒரு அடிமைக்கென்று தனிப்பட்ட உணர்வுகள் இருந்தாலும் அதை வெளிப்படுத்த முடியாது. தலைவனின் விருப்பு வெறுப் புகளே அடிமையின் விருப்பு வெறுப்பாக அமைய வேண்டும். வேலை செய்ய வேண்டும். ஆனால் ஊதியம் கிடையாது.



தனக்கென்று முகவரி இல்லாதவன். தனக்கென எதையும் தீர்மானிக்க இயலாதவன். தானாக எந்த முடிவையும் எடுக்க முடியாதவன். தனக்காக வாழாமல், தன் தலைவனுக்காகவே வாழ்பவன். அவன் தான் அடிமை. அவனை "நடமாடும் பிணம்" என்று சொன்னாலும் கூட அது மிகையாகாது. மரியாள் அப்ப டிப்பட்ட ஒரு தாழ்நிலைக்கு, இழிநிலைக்குத்தான் தன்னை ஆளாக்குகிறாள். இந்த அடிமைத்தனம் அவள்மீது திணிக்கப் பட்ட சுமை அல்ல. அவளாக விரும்பி ஏற்றுக் கொண்ட சுகமான சுமை. திருமண உறவுக்கு அப்பாற்பட்டு தாயாக சம்மதிப்பதால் நேரிடக்கூடும் சங்கடங்களை அறியாத பேதை அல்ல மரியாள். தனது நற்பெயருக்கு களங்கம் வரலாம். தனது குடும்பகௌரவம் நிலை குலையலாம். நிச்சயிக்கப்பட்ட தனது திருமணம் தடைபடலாம். மோயீசன் சட்டப்படி, தன்னைக் கல்லால் எறிந்து கொள்ளலாம். உறவுகள் பிரிந்தாலும், ஊரே சிரித்தாலும், உயிரே போனாலும் பரவாயில்லை. ஆண்டவர் விருப்பம் நிறைவேற, தான் தேவையென்றால், எதற்கும் தயார் என்னும் துணிச்சலான முடிவை எடுக்கிறாள் மரியாள். எதைப்பற்றியும் கவலைப்படாமல் "இதோ ஆண்டவரின் அடிமை" என்கிறாள். எப்படிப்பட்ட துணிச்சல்!

எங்கிருந்து வந்தது இந்த இமாலயத்துணிவு? "அழைக்கும் கடவுள் அனைத்தையும் பார்த்துக் கொள்வார்" என்ற ஆழமான அசைக்க முடியாத நம்பிக்கையைத் தவிர, வேறு எது அவளது தைரியத்துக்கு காரணமாக இருக்க முடியும்? "அவநம்பிக்கை யிலும் நம்பிக்கை" (Hoping against Hope) கொண்டவள் அன்னை மரியாள். மனித கண்களுக்கு முடியாத காரியத்தை, அவளது விசுவாசக் கண்கள் நடக்கும் என்று உறுதியாக நம்பினாள். அதற்காக எதையும் எதிர்கொள்ளவும் தயாராகிறாள் அன்னை மரியாள். மரியாளைப் பொறுத்தவரையில், "ஆண்டவர் முன்னால், மற்ற அனைத்தும் பின்னால்". "உடலை மட்டுமே கொல்வதையன்றி வேறு எதுவும் செய்ய இயலாதவர்களுக்கு அஞ்ச வேண்டாம். மாறாக கொன்றபின் நரகத்தில் தள்ள அதிகாரமுள்ளவருக்கே அஞ்சுங்கள்'' (லூக் 12:4-5) என்றும், ''நீங்கள் முதலில் அவருடைய ஆட்சியை நாடுங்கள். அப் பொழுது இவை உங்களுக்கு சேர்த்துக் கொடுக்கப்படும்'' (லூக் 12:31) என்றும் இயேசு சீடர்களிடம் சொன்னதற்கு, ஏற்கனவே முன்வடிவம் கொடுத்தவள் மரியாள். இயேசுவை முன்னிட்டு அவள் அனுபவித்த வியாகுலங்கள் ''என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து, தன் சிலுவையைத் தூக்கிக் கொண்டு என்னைப் பின்பற்றட்டும்'' (மாற்கு 8:34) என்று இயேசுவின் நிபந்தனையை ஏற்கனவே வாழ்வாக்கியவள் மரியாள்.

அவளது ஆழமான கடவுள் நம்பிக்கை இறையன்பின் வெளிப்பாடு. அதே சமயம், ஐங்கரின் ஊருக்கு விரைந்ததும், கானாவூர் கலியாணத்தில் பரிந்துரைத்ததும் அவளின் பிறரன்புக்கு சாட்சியங்கள். எலிசபெத்து கருவுற்றிருக்கிறாள் என்று கபிரியேல் தூதர் சொன்னதும் விரைந்து சென்றவள் மரியாள். இவ்வாறு அவள் விரைந்து செல்லும் போது அவள் சாதாரணப் பெண் அல்ல. "கடவுளின் அருளை கண்டடைந்தவள்", "ஆண்டவரை கருத்தாங்கியவள்'' இருப்பினும், கருவுற்றிருக்கும் எலிசபெத்துக்கு தன்னுடைய துணையும் உதவியும் தேவை என்பதை அவளாக உணர்ந்து ஓடிச்செல்கிறாள். தேவை என்றால் சேவை செய்ய, அழைக்கா விட்டாலும், தானாக வந்து நிற்பவள் அன்னை மரியாள். "நான் உங்களிடம் அன்பு செலுத் தியது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துங் கள். நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்" என்று இயேசு தன் சீடர்களுக்கு கொடுத்த புதிய கட்டளையின் முழுமையான எடுத்துக்காட்டு மரியாள்.

மரியாள் எலிசபெத்து சந்திப்பு வெளிப்படுத்தும் செய்திகள் தான் எத்துணை எத்துணை! அச்சந்திப்பு மரியாளை புதிய உடன் படிக்கைப் பேழையாகப் படம் பிடித்துக்காட்டுகிறது. பழைய ஏற்பாட்டில், உடன்படிக்கைப் பேழையின் முன் தாவீது அரசன் ஆடினான் (2 சாமு 6:14, 20). புதிய உடன்படிக்கைப் பேழை யின் முன் ஆடுபவர், எலிசபெத் வயிற்றில் உருவாகியிருந்த, ஆறுமாத கருவான திருமுழுக்கு யோவான். (லூக்:1:44). பழைய உடன் படிக்கைப் பேழையினுள் இருந்தவை மோயீச னின் கோல் (விடுதலையின் அடையாளம்), மன்னா உணவு (இறைபராம ரிப்பின் அடையாளம்) மற்றும் பத்துக்கட்டளைகள் பொறிக்கப்பட்ட பலகை (வாழ்வின் வழிமுறைகள்). அவைகள் கடவுள் எவ்வாறு இஸ்ரயேல் மக்களின் வாழ்க்கையில் செயல்பட்டார் என்பதை நினைவுப்படுத்தும் சில பொருட்களே. புதிய உடன்படிக்கைப் பேழையினுள் இருப்பதோ, கருவாக இருக்கும் மீட்பர்,

விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த உயிருள்ள உணவு, மற்றும் மலைப்பொழிவின் போது புதிய கட்டளைகளைக் கொடுத்த புதிய மோயீசன் இயேசு. இச்சந்திப்பு அன்னை மரி யாளை நற்கருணைப் பெட்டமாக சுட்டிக்காட்டுகிறது. நற் கருணை என்பது உயிருள்ள, மெய்யான, உண்மையான, இயேசுவின் உடல். அந்த உடலை தசையோடும் இரத்தத் தோடும், பத்து மாதம் தன் உதிரத்தில் சுமந்தவள் மரியாள். எனவே, அவளது கருப்பைதான் முதல் உயிருள்ள நற் கருணைப் பேழை. பின்னாளில் தன்னை உணவின் வடிவில் தந்த இயேசுவைக் கருவாக சுமந்து சென்றதன் மூலம், முதல் நற்கருணைப் பவனியை நடத்துகிறாள் அன்னை மரியாள். அப்பவனியானது நாசரேத்தில் புறப்பட்டு ஐங்கரின் பட்டணத்தை சென்று அடைகிறது. ''நானே வானின்று இறங்கி வந்த உயிருள்ள உணவு'' என்று இயேசு சொல்லு முன்பே, அவர்



பிறந்த போதே, அவரை தீவனத் தொட்டியில் கிடத்தி, ''இவரே உங்களை வாழ வைக்கும் உண்மையான உணவு'' என்று அடையாள முறையில் முன்னறிவித்தவள் அன்னை மரியாள். இச்சந்திப்பு, பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் சங்கமிக்கும் பாலமாக அமைகிறது. பழைய ஏற்பாட்டின் நிறைவாகிய திருமுழுக்கு யோவானும் புதிய ஏற்பாட்டின் தொடக்கமான இயேசுவும் சந்திக்கிறார்கள். கடவுளை தரிசித்த மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கிறார் திருமுழுக்கு யோவான். எலிசபெத்து வாழ்த்துகிறாள். மரியாள் பாடுகிறாள். வயதில் பெரியவளாக இருந்தாலும், மரியாளின் தற்போதைய மகிமையான நிலையைக் குறித்து அறிவிக்கவோ, வாழ்த்தவோ எலிசபெத்து சிறிதும் தயங்கவில்லை. தான் ஆண்டவரின் தாய் என்றாலும், எலிசபெத்துக்கு உதவி செய்வதை குறைவாக மரியாள் எண்ணவில்லை. மகிழ்ச்சி, தாழ்ச்சி போன்றவை தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்களின் அணிகலன்கள் என்பதை இச்சந்திப்பு உணர்த்துகிறது. ஒருநாள் இருநாள் அல்ல, மூன்று மாத காலம் தங்கியிருந்து உதவி செய்கிறாள் மரியாள். எலிசபெத்தின் ஆறாம் மாதத்தில் வந்தவள், மூன்று மாதம் தங்கியிருந்தாள் என்றால், எலிசபெத்தின் பேறுகாலம்வரை இருந்தாள் என்றுதானே அர்த்தம்! செய்யும் உதவியை முழுமையாகச் செய்கிறாள் அன்னை மரியாள். இவ்வாறு, மரியாள் எலிசபெத் சந்திப்பு, வெறுமனே சாதாரண உறவுப் பரிமாற்றம் மற்றும், சமூக அக்கறை மட்டுமல்ல, அது மாபெரும் இறையியல் பாசறை மற்றும் கருத்தரங்கு. அங்கு மாதா பாடிய பாடலில் அடங்கியுள்ள இறையியல் சிந்தனையை என்னவென்பது! அது உண்மையில் மாபெரும் புரட்சிப் பாடலே.

உள்ளத்தின் மாற்றத்திற்கும், உலகத்தின் மாற்றத்திற்கும் அழைப்பு விடுக்கும் பாடல். உளவியல் புரட்சி, சமூகப்புரட்சி, அரசியல் புரட்சி மற்றும் சமய புரட்சிகள் அப்பாடலில் அடங்கியுள்ளன. மரியாள், கடவுள் தனக்கு செய்த வல்ல செயலில் தொடங்கி, இஸ்ராயேலுக்கு ஆண்டவர் செய்த மாபெரும் செயலை நினைவுகூர்ந்து அப்பாடலை முடிக்கிறார். ''எளிய உள்ளம் கொண்டோர் பேறு பெற்றோர்'' (மத் 5:3), ''தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான், தன்னை உயர்த்துவோன் தாழ்த்தப்படுவான்'' (லூக் 18:14), ''வறுமையில் வாடுவோரை பரிவுடன் நோக்குபவரே, இறையரசின் சொந்தக்காரர்கள் (மத் 25:31-46) போன்ற இயேசுவின் பல்வேறு போதனைகளுக்கு முன்வடிவம் கொடுப்பது போல் அமைந்துள்ளது இப்பாடல். அவளது பிறர் அன்புக்கு, கானாவூர் கலியாண வைபவமும் சாட்சியம் சொல்லும். கேட்காமலேயே எலிசபெத்துக்கு விரைந்து சென்று உதவிய மரியாள், யாரும் சொல்லாமலேயே கானாவூர் கலியாணத்தில், குறிப்பறிந்து பரிந்துரைத்த அன்னை மரியாள், நமது குறைகளை எடுத்துச் சொல்லும் போது, இன்னும் விரைவாக பரிந்துரைப்பாள், அது நிச்சயம் நடக்கும் என்பது தானே இயல்பான சிந்தனையாக இருக்க முடியும்! எனவே தான், தாய்த்திருச்சபை, அன்னையின் வழியாக நமது தேவைகளை எடுத்துச் சொல்ல அறிவுறுத்துகிறது. கானாவூர் திருமணத்தின் போது, ''அம்மா, அதைப்பற்றி நாம் என்ன செய்யமுடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே'' என்று இயேசு சொன்ன பிறகும், ''அவர் உங்களுக்கு சொல்வதெல்லாம் செய்யுங்கள்'' என்ற மரியாளின் நம்பிக்கையை என்ன சொல்வது! நம்பிக்கையோடு செபிப்பதற்கு இதைவிட சிறந்த எடுத்துக்காட்டு வேறு எதுவாக இருக்க முடியும்? ''நீங்கள் இறைவனிடம் வேண்டும் போது நம்பிக்கையுடன் கேட்பதை எல்லாம் பெற்றுக் கொள்வீர்கள்" (மத் 21:22), "நீங்கள் இறைவனிடம் வேண்டும் போது எவற்றையெல்லாம் கேட்பீர்களோ அவற்றை பெற்று விட்டீர்கள் என நம்புங்கள். நீங்கள் கேட்டபடியே நடக்கும்" (மாற்கு 11:24) என்ற இயேசுவின் பின்னாளைய அறிவுரைக்கும் உயிருள்ள எடுத்துக்காட்டு அன்னை மரியாள்.

மேலும், அன்னை மரியாள் அமைதியின் தாய். அவள் தியாகத்தின் தாய் மட்டுமல்ல. தியானத்தின் தாயும் கூட. பரபரப்பாயிருந்த மார்த்தாவிடம், இயேசு சொல்கிறார், "மார்த்தா! மார்த்தா! நீ பலவற்றைபற்றிக் கவலைப்பட்டு கலங்குகிறாய். ஆனால் தேவையானது ஒன்றே. மரியாள் நல்ல பங்கைத் தேர்ந்து கொண்டாள். அது அவளிடமிருந்து எடுக்கப்படாது" (லூக் 10:42). மார்த்தாளின் சகோதரி மரியாளைக் குறித்து சொன்னதை, ஏற்கனவே வாழ்ந்து காட்டியவள் அன்னை மரியாள். எதைக் குறித்தும் மாதா கவலைப்படவுமில்லை, ஒருபோதும் பரபரப்பாயிருந்ததும் இல்லை. ''ஆண்டவரின் வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும்" என்ற நல்ல பங்கை தேர்ந்தவள் மாதா. அனைத்தையும் உள்ளத்தில் இருத்தி சிந்தித்தவள் மரியாள். இடையர்கள் வந்து பாலனை வணங்கியபின், தாங்கள் கண்டதையும் கேட்டதையும் சொன்னபோது, எல்லோரும் வியப்படைந்தார்கள். "ஆனால் மரியாள் இந்நிகழ்ச்சிகளை யெல்லாம் உள்ளத்தில் இருத்தி சிந்தித்துக் கொண்டிருந்தாள்" (லூக் 2:17-18). இயேசுவுக்கு பன்னிரண்டு வயதில், எருசலேமில் நடந்த நிகழ்ச்சிகளையெலலாம், தன் உள்ளத்தில் பதித்து வைத்திருந்தார் மரியாள் (லூக் 2:51). உண்மையான ஆன்மீகம் உள்ளத்தில் வேரூன்றி, உலகத்தில் கிளை பரப்பி, அன்புச் செயல்களில் வெளிப்பட வேண்டும். இறையன்பு பிறரன்பால் மெய்ப்பிக்கப்பட வேண்டும். கடவுளை எவ்வளவு உறுதியாக நம்ப வேண்டும் என்பதற்கும், எவ்வாறு பிறரின் தேவையை உணரந்து தானாக முன்சென்று விரைந்து உதவ வேண்டும் என்பதற்கும், மாதா உன்னதமான எடுத்துக் காட்டு. தேவையான ஒன்றை மட்டும் தேர்ந்தெடுப்பதற்கு அன்னை ஒரு

முன்னுதாரணம். இறையன்பிற்கும் பிறரன்பிற்கும் அவள் தான் சரியான வழிகாட்டி.

**சுருக்கமாக**, மாதாவுக்கு மரியாதை செய்ய வேண்டும். ஏனெனில் மூவொரு கடவுளும் அவளில் செயல்பட்டனர். மாதாவை மகிமைப்படுத்த வேண்டும். ஏனெனில், இயேசுவோடு கருவறை தொடங்கி கல்லறைவரை பயணித்தவள் இவ்வுலகில் அவள் மட்டுமே. மேலும், இயேசுவுக்காக, அவர் பிறக்கும் முன்பும், பிறக்கும் போதும், பிறந்த உடனும், இறப்பின் போதும் அதிக துன்பங்களை அனுபவித்தவள் அவள் தான். கடவுளின் மீட்புத்திட்டத்தில் அவளது ஈடுபாடு, இயேசுவின் இறப்போடு முடிந்துவிடவில்லை. திருத்தூதர்களோடு இணைந்து, ஒரே உள்ளத்தோடு செபித்து அவர்களைப் பலப்படுத்துகிறாள். ஆவியானவரைப் பெற்றுக்கொள்ள அவர்களைத் தயார்படுத்துகிறாள் (திப:1:14). யூதாசுக்குப் பதிலாக மத்தியாவைத் தேர்ந்தெடுக்கும் போது, திருத்தூதர்களோடு உடனிருக்கிறார். தூய ஆவி நிழலிட்டதால் கருத்தரித்து, இயேசுவை பெற்றெடுத்தவள், அதே தூய ஆவி சீடர்கள் மீது அக்னி வடிவில், பெந்தகோஸ்து நாளில் இறங்கி வந்து, கிறிஸ்துவின் மறையுடலாகிய திருச்சபை பிறக்கும் போதும், சீடர்களோடு இருக்கிறார். எனவே, எப்படி கிறிஸ்துவிடமிருந்து மரியாளை பிரிக்க முடியாதோ, அதைப் போலவே திருச்சபையிலிருந்தும் மரியாளையும் பிரிக்க முடியாது என்பதற்கு இதுவே சான்று.

**இறுதியாக**, மரியாளுக்கு மரியாதை என்பது திருச்சபையிடமிருந்து பிறக்கவில்லை. அதை தொடங்கி வைத்தது எந்த மண்ணவரும் அல்ல. அது விண்ணகத்தில் நிச்சயிக்கப்பட்டது. விண்ணவரால் அஸ்திவாரமிடப்பட்டது. அது நாசரேத்தூரில், கபிரியேல் தூதரால் “அருள் நிறைந்தவளே வாழ்க” (லூக் 1:28) என்று சொல்லி முன் மொழியப்படுகிறது. பின்னர் ஐங்கரின் பட்டணத்திலே, எலிசபெத்தினால் ‘‘பெண்களில் ஆசீர் பெற்றவள் நீரே” (லூக் 1:42) என்று சொல்லி வழி மொழியப்படுகிறது. “இதோ இந்நாள் முதல் எல்லா தலையினரும் என்னைப் பேறுடையாள் எனப் போற்றுவர்’’ (லூக் 1:48) என்று அன்னை மரியாளும் அதை ஏற்றுக்கொள்கிறாள். “உம்மைத் தாங்கிய வயிறும் பாலூட்டிய கொங்கைகளும் பேறுபெற்றவை” (லூக் 11:27) என்று ஒரு பெண் குரலெழுப்பி அறிக்கையிடுகிறாள். கடைசியில், இயேசு சிலுவையில் தொங்கும்போது, “இவரே உன் தாய்” (யோவான் 19:26) என்று பிரகடனப்படுத்துகிறார். தூதர் முன்மொழியும் போது மாதா மட்டுமே இருக்கிறார் (ஒருவர்). வழிமொழியும் போது மாதாவும் எலிசபெத்தும் மட்டுமே (இருவர்) இருக்கின்றனர். பெண் ஆர்ப்பரித்து அறிக்கையிடும் போது, அங்கே ஒரு கூட்டமே இருக்கிறது. இயேசு பிரகடனப்படுத்தும் போது, எருசலேம் நகரே கூடிநிற்கிறது. நாசரேத்துகுக்கிராமத்தில் மரியாளின் சிறிய வீட்டில், இரகசியமாக ஆரம்பித்தது, எருசலேம் நகரில், கல்வாரி மலையில் பகிரங்கமாக அனைவரின் முன்பும் பிரகடனப்படுத்தப்படுகிறது. மாதாவுக்கு கொடுக்கப்பட்ட மகிமையில் என்ன ஒரு பரிணாம வளர்ச்சி!

ஆரம்பித்து வைத்தவர் வானதூதர் கபிரியேல். நிறைவுக்கு இட்டுச் செல்பவர் இறைவனும் மனிதனுமான இயேசு, அதுவும் விண்ணுக்கும் மண்ணுக்கும் நடுவில். மரியிடம் பிறந்ததால் இயேசுவுக்கு பெருமையல்ல. இயேசுவைப் பெற்றெடுத்ததால் தான் மரியாளுக்குச் சிறப்பு. மரியாளை இலக்காக அல்ல, இலக்கணமாகவே திருச்சபை அடையாளம் காட்டுகிறது. அவளை வாழ்வாக அல்ல, வாழ்வுக்கு இட்டுச் செல்லும் வழியாகவே திருச்சபை சுட்டிக்காட்டுகிறது. ‘‘அன்னை வழியாக மகனிடம்’’ என்று சொல்லும் திருச்சபை ‘‘அன்னை வழியாக மட்டுமே’’ என்று வாழ்வின் வழிகளை ஒருபோதும் சுருக்கிக் கொண்டதில்லை. ஆனால், கடவுளை நம்புகிறவர்கள், இயேசுவை நேசிக்கிறவர்கள், ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்கள், விவிலியம் அறிந்திருப்பவர்கள், மீட்பின் வரலாற்றை தெரிந்து வைத்திருப்பவர்கள், எப்படி விசுவாச வாழ்விற்கு படிக்கல்லான மரியாளை தடைக்கல்லாகப் பார்க்க முடியும்? கடவுளின் திருவுளத்தை நிறைவேற்றுவற்கும், இயேசுவின் போதனைகளை வாழ்வாக்குவதற்கும் மனிதர்களில் அன்னை மரியாளைவிட சிறந்த எடுத்துக்காட்டு வேறு யார் இருக்க முடியும்? மரியாளைப் போற்றும்போது, நாம் இயேசுவைத்தான் போற்றுகிறோம். மரியாளைப் பாடும்போது, நாம் இறையருளைத்தான் பாடுகிறோம். மரியாளின் பக்தி முயற்சிகள் இயேசுவிடமும் இறைவனிடமும் தான் இட்டுச்செல்லுமே தவிர, ஒருபோதும் அவர்களிடமிருந்து நம்மை அன்னியப்படுத்தாது.

‘‘அவர் (மகன் இயேசு) சொல்வதையெல்லாம் செய்யுங்கள்’’, இது தாய் நமக்குத் தரும் அன்புக் கட்டளை. ‘‘இதோ உம் தாய்!’’ இது மகன் நமக்குத் தரும் கட்டளை. தாயும் மகனும் ஒருவர் ஒருவரைச் சுட்டிக் காட்டுகின்றனர். தாய் மகனை நோக்கியும், மகன் தாயை நோக்கியும் கை காட்டுகின்றனர். ‘‘மரியாளை ஏற்றுக்கொள்ள அஞ்சவேண்டாம்’’ (மத் 1:20) இது நற்செய்தியின் தொடக்கம், இயேசு பிறக்கும் முன். ‘‘அதுமுதல் அச்சீடர் அவரைத் தம் வீட்டில் ஏற்று ஆதரவு அளித்து வந்தார்’’ (அரு 19:27). இது ஏறக்குறைய நற்செய்தியின் நிறைவு, இயேசு இறக்கும் முன். தூதரின் வார்த்தைக்கு செவிமடுத்து உடனே யோசேப்பு மரியாளை ஏற்றுக்கொண்டார். இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டு, யோவானும், அந்நேரம் முதல் அவளை ஏற்றுக்கொண்டார். நாம் அவளைத் தாயாக ஏற்றாலும், அதை நமது வாழ்வின் மூலம் எண்பிக்க வேண்டியது முக்கியம். மரியாள் இயேசுவுக்கு இணையல்ல. ஆனால் மீட்புத் திட்டத்தில் அவருக்கு துணை. மரியாள் வாழ்வின் இலக்கு அல்ல. ஆனால் சீடத்துவ வாழ்க்கையின் இலக்கணம். அவள் கடவுள் அல்ல. ஆனால் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்ட நாயகி. இயேசுவின் பொது வாழ்க்கை மரியாளின் முன்னிலையில்தான் ஆரம்பித்தது (கானாவூர் கலியாணம்) நிறைவும் பெற்றது (கல்வாரி மலையில்). மரியாளை ஏற்றுக்கொள்ள மறுப்பது தமதிருத்துவத்தின் திட்டத்தையே ஏற்க மறுப்பதாகும். மரியாளை வெறுப்பது இயேசுவையே வெறுப்பதாகும். பெத்லகேம் ஊரில் மரியாளுக்கு இடம் தர மறுத்தவர்கள் இறுதியில் அவளுக்கல்ல, மாறாக, இயேசுவை பெற்றெடுக்கத்தான் இடம் தர மறுத்தார்கள். எனவே, மரியாளை மறுப்பது இயேசுவை மறுப்பதற்கு சமம். அவளுக்கு இன்று தங்கள் இல்லத்திலும் உள்ளத்திலும் இடம் தர மறுப்பவர்களுக்கும் அன்று பெத்லகேமில் இடம் தர மறுத்தவர்களுக்கும் வேறுபாடு இல்லை. அன்றாவது பெத்லகேம் வாசிகள் அறியாமல் செய்தார்கள். இன்றோ அறிந்தே செய்கிறார்கள். தெரியாமல் செய்வது தவறு. அறிந்தே செய்வது பாவம். மரியாளுக்கு இன்று ரசிகர்கள் தேவையில்லை. அவளின் வழித்தடத்தில் இயேசுவைப் பின்பற்றும் சீடர்களே தேவை. மாதாவின் பக்தர்களாக மட்டும் இருப்பதனால் எப்பயனும் இல்லை. அவளின் பிள்ளைகளாக வாழ்வதே அவளது விருப்பம்! அதுவே இயேசுவின் விருப்பம்! அதுவே மூவொரு கடவுளின் விருப்பம்!

# மனித குல மேம் பாட்டுக்காக புனிதராக அன்னை தெரேசா!

மனித குல மேம் பாட்டுக்காக உழைத்து இன்று புனிதராக அங்கீகரிக்கப்பட்டுள்ள அன்னை தெரேசா! வறுமையினாலும் நோயினாலும் கெட்டு நொந்து போயிருந்த மனித குலத்தின் மேம்பாட்டுக்காக தன்னையே அர்ப்பணித்து அருந்தொண்டாற்றி இறைபதம் எய்தி விட்ட அன்னை திரேசா இன்று கத்தோலிக்க திருச்சபையினரால் புனிதராக அங்கீகரிக்கப் பட்டுள்ளார். வையத்துள் வாழ்வாங்கு வாழ் பவர். வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும் என்ற திருக்குறளுக்கு ஓர் எடுத்துக் காட்டாக வாழ்ந்து ஏழை மக்களுக்கு அருந்தொண்டு ஆற்றி வந்த அன்னை தெரேசா இன்று வானுறையும் தெய்வமாகி விட்டார். அதனை கொண்டாடும் வகையில் இன்று இங்குள்ள தமிழ் கத்தோலிக்க வெளியீட்டகத்தினால் தமிழ் கத்தோலிக்க சமுக மக்கள் ஏற்பாடு செய்துள்ள இந்த விழா மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

11-09-2016ல் மாலை ஸ்காபுறோ கிங்ஸ்ரன் வீதியில் அமைந்துள்ள ஸ்காபுறோ மிஸன் தேவாலய மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த புனித அன்னை திரேசாவின் புகழ் மாலை அரங்கத்திற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்த லண்டன் ஒண்டாறியோ மேற்றாசன யாத்திரை ஸ்தலத்தில் பணி புரிகின்ற செபமாலை தாசர் சபையை சேர்ந்த முன்னாள் மேலாளர் இறை இரக்கத்தின் வெள்ளி விழா ஆண்டின் இறை இரக்க பிரதிநிதி அருட்தந்தை பிரான்சிஸ் ஜெய சீலன். அருட்தந்தை அந்தோனிப்பிள்ளை அ.ம.தி. அன்னை திரேசா சபையைச் சேர்ந்த அருட்சகோதரி இவா சாள்நினி அருட்ச கோதரி பெநிக்சி அவர்களும் அறிஞர் திரு. சாமி அப்பாத் துரை. திரு. ஈழவேந்தன் முன்னாள் பாரா‌ள மன்ற உறுப்பினர். புதுவாழ்வு



குழுவின் இயக்குனர் சகோதரன் யேசு தவராஜன். வைத்தியக்கலாநிதி திரு. போல் ஜோசெப் ஆகியோர் விளக்கேற்றி னார்கள். சகோதரி மரினா அந்தோனிப் பிள்ளை அவர்களால் எல்லாம் நீ இயேசுவே என்ற ஆரம்பப் பாடல் பாடி நிகழ்ச்சி ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து மறைபணி



திரு.டேவிட் தோமாஸ் அவர்களின் தலைமையில் புனித அன்னை திரேசாவின் புகழ் மாலை அரங்கம் தொடங்கியது. அடுத்ததாக புனித திரேசாவின் சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் இருவர் மேடையில் வைக்கப்பட்டிருந்த அன்னை திரேசாவின் திருவுருபவப் படத் தினை திரை நீக்கம் செய்து வைத்தனர் சிறப்புரை ஆற்றிய அருட் தந்தை றெறி கலகர் இளவயது முதல் இறைபணி மீது திருவுளங் கொண்டு துறவு வாழ்க் கையை மேற்கொண்ட அன்னை திரேசா அவர்கள் இறை பணியுடன் மாத்திரம் நின்று விடாது வறுமையினாலும். நோயினாலும் அவஸ்த்தைப்பட்ட ஏழை மக்களுக்கு சேவை செய்யும் பொதுப் பணியிலும் தன்னை ஈடுபடுத்தி பெருமைக்குரியவர் ஆனார். அதனால் இன்று அவர் புனித அன்னையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளார் எனக் கூறினார். இவ் வைபவத்தினை ஒட்டி அன்னை திரேசாவின் திருவுருபவப் படத்தினை முன் அட்டையின் கொண்டு பிரசுரிக்கப் பட்ட “அன்பு மக்களே” என்ற சிறப்பு மலரை கலாநிதி அருட்தந்தை தோமாஸ் அந்தானிப்பிளை்ளை வெளியிட்டு வைத்தார். இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பு உரையாற்றிய அறிஞர் திரு சாமி அப்பாத்துரை அவர்கள் இவ்வாறு கூறினார் இவர் தொடர்ந்து உரையாற்றிய போது இறைவன் மீது மாத்திரம் நம்பிக்கை வைத்து அவரையே பிரார்த்தித்தும் துதித்தும் வரும் எனைய புனித சகோதரிகளைப் போலல்லாது இறைவனைப் பிரார்த்திப்பதோடு. இந்தியாவிலே குஸ்டரோக நோய்க்கு உள்ளாகி தன்நம்பிக்கையினை இழந்து விரக்தியுடன் நடைப்பிணங்களாக வாழ்ந்து கொண்ருந்த நூற்றுக்கணக் கான நோயாளிகளுக்கு விருப்புடன் சேவையாற்றி உத்தம தாயாரான அன்னை தெரேசா உண்மையிலேயே புனிதராக அங்கீகரிக்கப் படுவதற்கு தகுதி வாய்ந்தவராவார் எனக் குறிப்பிட்டார்.

திரு. ஈழவேந்தன் உரையாற்றிய போது அன்னை திரேசா 1910ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26ம் திகதி மண்ணில் அவதரித்தார் துறவியாக தனது பதினெட்டாவது வயதில் இந்தியாவுக்கு வந்து வறுமையினாலும். பிணியினாலும் அவதியுற்ற மக்களுக்கு அரும்பெரும்





சேவை ஆற்றி அனைவரையும் தன்பால் ஈர்த்தார். அதனால் இந்திய அரசு அவருக்கு பாரத ரட்னா என்ற அதி உயர் விருதினை வழங்கி கௌரவித்தது. மண்ணில் புனிதராக வாழுந்து அரும் பெருந் தொண்டாற்றிய அவர் தனது 87வது வயதில் இறைபதம் எய்தினார். இன்று அவர் கத்தோலிக்க திருச்சபையி னால் புனிதராக அங்கீகரிக்கப்பட்டுள்ளார் அவரது வாழ்க்கை நெறியினை நாம் அனைவரும் பின பற்றி வாழ வேண்டும் என்றார். புது வாழ்வு குழுவின் இயக்குனர் சகோதரன் யேசு தவராஜன் தனது உரையில் அன்னை திரேசாவின் பணிகளையும் தியாக வாழ்வுவையும் பற்றி எடுத்து கூறிர். திருமதி. சரஸ்வதி அரிக்கிருஸ்ணன் தனது உரையில் கவிதைகளைப் வடித்த கலைப் புஸ்பா கிறிஸ்ரி சகோதரி மணிமேகலை, சகோதரி ராஜேஸ்வரி, வைத்திய கலாநிதி டாக்டர் போல் ஜோசெப் அவர்கள் வெள்ளையும் நீலமும் கலந்த வானத்து போர்வைக்குள் வளர்ந்தவள் குப்பையில் கிடந்த பிள்ளைகளை மடிப்பைக்குள் ஏந்திப் பராமரித்தாள். தட்டுங்கள் திறக்கப்படும் என்பதற்கொப்ப தட்டிக் கொண்டே இருந்தாள். சட்டத்தரணி திரு. கனக மனோகரன் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினார்கள் ஈற்றில் புனித அன்னை திரேசா பயன் படுத்திய திருச் சின்னத்தினை புகழ் மாலை அரங்கத் திற்கு சிறப்பு விருந்தினராக வருகை தந்த செபமாலை தாசர் சபையைச் சேர்ந்த அருட்தந்தை பிரான்சிஸ் ஜெயசீலன் அவர்களால் அனைவருக்கும் முத்தமிடக் கொடுத்து ஆசீர்வதித்தார். வைத்தியக் கலாநிதி போல் ஜோசெப் அவர்களால் நன்றி உரை வழங்கப்பட்டது. நிறைவாக சகோதரி மரினா அந்தோனிப்பிள்ளை புனித அன்னை திரேசாவின் பாடல் பாடி இனிதே இறையாசீருடன் நிறைவுற்றது. இவ்விழாவிற்கு வருகை தந்த அனைவ ருக்கும் எமது கத்தோலிக்க வெளியீட்ட கத்தின் சார்பில் நன்றி கூறுகின்றோம்.



2016 மார்கழி மாதம் 17ம் திகதி லூர்துமாதா தேவாலய
தமிழ்கத்தோலிக்க மக்களின் **சிறுவர்களுக்கான நத்தார் விழா**
புனித லூர்து மாதா கத்தோலிக்க பாடசாலையில் நடைபெற ஒழுங்குகள்
செய்யப்பட்டுள்ளன ஆகவே அந்த நிகழ்வில் பங்கு கொண்டு
நிகழ்வைச் சிறப்பிக்க விரும்புகின்ற சிறுவர்கள் தங்களின்
ஆக்கங்களை பதிவு செய்யும் வண்ணம் கேட்டுக்கொள்கிறேன்

மறைபணி திரு தோமாஸ் டேவிட் தொலைபேசி **647.348.5100**

*நன்றி*



# 15வது ஆண்டு நிறைவாக 2000 அருள் நிறை மரியே அன்னைக்கு புகழ் மாலை வாழ்த்து

**மகிழ்ச்சி நிறை பேருண்மை**
(திங்கள் அல்லது சனி)



கபிரியேல்
அதிதூதர் கன்னி
மரியாளுக்கு
மங்கள வார்த்தை
சொன்னதை
தியானிப்போம்



எலிசபெத்தைச்
சந்தித்ததை
தியானிப்போம்



இயேசு மனித
அவதாரம் எடுத்துப்
பிறந்ததை
தியானிப்போம்



இயேசு கோவிலில்
அர்ப்பணிக்கப்
படுதலை
தியானிப்போம்



கோவிலில்
இயேசுவைக்
கண்டு
பிடித்தலை
தியானிப்போம்

**ஒளி நிறை பேருண்மை**
(வியாழன்)



யோர்தானில்
இயேசு
திருமுழுக்கு
பெறுதலை
தியானிப்போம்



கானாவூர்
திருமண
விழாவில்
இயேசுவின்
புதுமையை
தியானிப்போம்



இறையரசை
அறிவித்து மனந்
திரும்ப அழைப்பு
விடுகிறார் இயேசு
தியானிப்போம்



இயேசுவின்
உருமாற்றத்தை
தியானிப்போம்



திவ்விய
நற்கருணையை
நிறுவியதை
தியானிப்போம்

**துயர் நிறை பேருண்மை**
(செவ்வாய் வெள்ளி)



இயேசு
பூங்காவனத்தில்
இரத்தம்
வியர்த்ததை
தியானிப்போம்



இயேசு கசையால்
அடிபட்டதை
தியானிப்போம்



இயேசுவுக்கு
முள்முடி
தரிக்கப்பட்டதை
தியானிப்போம்



இயேசு
சிலுவையைச்
சுமந்து
செல்லுதலை
தியானிப்போம்



இயேசு
சிலுவையில்
உயிர்விடுதலை
தியானிப்போம்

**மகிமை நிறை பேருண்மை**
(புதன் ஞாயிறு)



இயேசு
உயிர்த்
தெழுதலை
தியானிப்போம்



இயேசு
விண்ணேற்றம்
அடைதலை
தியானிப்போம்



தூய ஆவியாரின்
வருகையை
தியானிப்போம்



தூய ஆவியாரின்
வருகையை
தியானிப்போம்



கன்னி மரியாள்
விண்ணுலக
மண்ணுலக
அரசியாக முடி
சூட்டப்பட்டதை
தியானிப்போம்

**ஐப்பசி மாதம் 8ம் திகதி 2016 ஆண்டு சனிக்கிழமை காலை 9மணி தொடக்கம் மாலை7.30வரை செபமாலை மாதம் மாதாவுக்கு புகழ்ச்சியாக 15வது ஆண்டாக 2000 அருள் நிறை மரியே வாழ்க என்ற செபமாலை தியானத்தை தமிழ் கத்தோலிக்க மாசற்ற இருதய அன்னை ஆலயத்தில் ஆரோக்கிய அன்னைப் பங்கும் பங்கு இளைஞர்களும் மரியாயின் சேனையினரும் சேர்ந்து நடாத்திய புகழ் மாலையில் ஏராளமான மாதாவின் பக்தர்கள் வருகை தந்து சிறப்பித்தார்கள். நிறைவில் பங்குத் தந்தை அருட்தந்தை.பீற்றர் ஜீத்தேந்திரன் அடிகளார் அவர்களால் நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு ஆசீர் வாதம் வழங்கப்பட்டது.**



இறைஇரக்கத்தின்
திருயாத்திரையின்போது
பாராளமன்றம் சென்றபோது

தவ காலத்தின் ஞான ஒடுக்கம் 2016ம் ஆண்டு அருட் தந்தை
ஜோன்சன் மரியதாஸ் அவர்களால் நடைபெற்றபோது





புனித பற்றிமா மாதா ஆன்மேரி அவர்களின் இல்லத்தில்
செபமாலை சொல்வதற்கு வருகை தந்தபோது



இது இலண்டன் யாத்திரை
ஸ்த்தலத்தில் அருட்தந்தை
பிரான்சிஸ் ஜெயசீலன்,
அருட்தந்தை அன்ரனி
கமலகாஸன், அருட்தந்தை
பீற்றர் டன்சரன் அவர்களுடன்
திரு யாத்திரை பயணிகள்.

இது அருட் தந்தை ரெறி கலகர் அவர்களின் ஐம்பதாவது ஆண்டு குருத்துவப்பணியை முன்னிட்டு எடுக்கப்பட்ட படம்.





அருட் தந்தை யோக்கிம்பிள்ளை அடிகள் இந்த வருடம் மார்கழி மாதம் குருத்துவப் பணியில் 60 வருடம் நிறைவு செய்கிறார் அவருடைய மாணவனாக படித்த அருட்தந்தை தோமாஸ் அந்தோணிப்பிள்ளை அவர்கள் இந்த மாதம் சந்தித்தபோது எடுத்த படம்.

# Eelaventhan meets Rev.Bishop of Chennai





Antonysaamy and handed over a copy of his book on Rev.Fr. Thaninayagam. Eelaventhan pleaded with the Bishop to come to the rescue of Eelam Tamils, who are facing cultural genocide, physical liquidation and economic strangulation. He, being the spiritual head of Tamil Nadu Catholics, must come to our rescue to save the Tamils before its too late. The Bishop expressed deep concern about our plight and said he would his utmost best to save us.

# கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம்




"வேரும் விழுதுகளும்" என்றபெயரில் கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் 16.10.2016 மாலை ஸ்காபரோ பெரிய சிவன் கலாச்சார மண்டபத்தில் பேராசிரியர் இ.பாலசுந்தரம் தலைமையில் நாடக விழாவை நடத்தியது. இவ்விணையம் முதன்முறையாக நாடகவிழா நடத்தியுள் ளமைபற்றித் தலைவர் தம் உரையிற் குறிப்பிட்டார். இந்நாடக விழாவில் "வீட்டுக்கு வீடுவாசற்படி" என்ற வட மோடிநாட்டுக் கூத்தும், "பணமும் பாசமும்" என்ற நாட்டிய நாடகமும் இடம்பெற்றன. முதியோருக்கான நியூ ஹொறைசன் திட்டத்தின் நிதியுதவியுடன் இந்நாடகத் தயாரிப்பும் நாடக விழாவும் நடை பெற்றமைகுறிப்பிடத்தக்கது.

தமிழர் சமூகத்தில் முதியோர் எதிர் கொள்ளும் துன்பங்கள், பிச்சினைகள் இவ் விருநிகழ்வுகளின் கருப்பொருளாக அமைந்தன. மாணவத் தொண்டர்கள் மூலமாகத் திரட்டப்பட்ட அத்தகவல்களில்



மிகமுக்கிய பிரச்சினையாகக் காணப்பட்ட **'முதியோரைத் துன்புறுத்தல்'** என்ற விடயமே இவ்விருகலைவடிவங்களில் எடுத்தாளப்பட்டிருந்தன. மூத்தோரால் பேணப்பட்டுவந்த நாட்டுக்கூத்தை இளையோருக்குப் பயிற்றுவித்து, அதனை மேடை யேற்றியமை மிகவும் பாராட்டத்த



முயற்சியாகும். இக்கூத்தைச் சபையயோர் மிக்க ஆர்வத்துடன் பார்த்து மகிழ்ந்ததோடு, ஒவ்வொருக காட்சியையும் பார்த்துப் பாராட்டு தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. முதியோர் அனு பவிக்கும் துன்பங்களை இளையோரும் அறியத்தக்கவகையில் கூத்தும் பரதநாட்டியமும் அமைந்திருந்தன. கூத்துக் கலையை இளையோருக்குப் பயிற்றுவித்து மேடைஏற்றிய அண்ணாவியார் மதி பாஸ்கரன் கணபதிப்பிள்ளை அவர்கள் கனடாவில் வாழும் சிறந்த நாட்டுக் கலைஞர்களில் ஒருவர் என்பதும் குறிப்பிடப்படவேண்டியதாகும். இரண்டாவதாக அண்ணாமலை கனடா வளாக நுண்கலை மாணவர்களின் "பணமும் பாசமும்" என்றநாட்டிய நாடகம் இடம் பெற்றது. இதனை நடன ஆசிரியை திருமதி சூரியகலா ஜீவானந்தம் தயாரித்து வழங்கினார்.

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் முதன் முதலாக இவ்விருகலை வடிவங்களையும் தயாரித் தளித்தமையையிட்டு நாம் பெருமை அடைகின்றோம். இவ்வகையில் இவ்விணையத்தின் தலைவர் பேராசிரியர் இ.பாலசுந்தரம், மற்றும் இணையச் செயற்குழுவினர் அனைவரும் பாராட்டுக் குரியவர்களா கின்றனர். இதனை நோக்கும்போது எழுத்தாளர் இணையம் சமூக நோக்குடன் புதியபாதையிற் செயற்படத் தொடங்கியுள்ளமை தோன்றுகின்றது. இணையத்தின் செயலாளர் சின்னையா சிவநேசன் அவர்கள் இந்நாடக விழாவிற்கு நிதியுதவிபெற்ற முறைகளையும், அத்திட்டத்தின் குறிக்கோள்கள், அதற்கேற்ப இவ்விரு கலை நிகழ்ச்சிகளும் தயாரிக்கப்பட்டமைபற்றியும் விரிவாக விளக்கி உரையாற்றினார். இறுதியாக பங்கு பற்றிய அனைத்துமாணவர்கள் கலைஞர்கள் அனைவருக்கும் சான்றிதழ்கள் வழங்கி, கௌரவிக்கப்படடார்கள். அத்துடன் எமதுபாரம்பரியக் கலைகள், கனடாவில் கலைமுயற்சிகள் எனப்



பல்வேறு கட்டுரைகள் அடங்கியசிறப்பிதழ் வெளியிடப்பட்டு, அப்பிரதிகள் இலவசமாகப் பார்வையாளருக்கு வழங்கப்பட்டன. மொத்தத்தில் கனடாவில் எம்மத்தியில் இயங்கும் சமூக நிறுவனங்களுக்கு இவர்களது செல்நெறி ஒருவழிகாட்டியாக அமையும் என நம்புகின்றோம்.

- கலைப்பிரியன்



Century 21

AFFILIATE REALTY INC.
Brokerage*
208-80 Corporate Drive
Toronto, ON M1H 3G5

**Cell 416 450 2396**
Bus 416 290 1200
Fax 416 290 1900
rsrikanthan@trebnet.com
www.homeandmore123.com

**Roy R. Srikanthan B.V.Sc.**
Sales Representative

*Independently Owned and Operated. ®/™ trademarks owned by Century 21 Real Estate LLC used under license or authorized sub-license. © 2014 Century 21 Canada Limited Partnership. ®/™ Trademarks of AIR MILES International Trading B.V. Used under license by LoyaltyOne, Inc. and Century 21 Canada Limited Partnership.

OFFICE



# RAMESH RAJALINGAM

Direct : 416.568.4409
Office : 416.321.2228
ramesh.rajalingam@gmail.com

ROYAL LEPAGE Vision Realty
Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
2210 Markham Road, #1 Toronto, ON. M1B 5V6

**Ravi Tharmalingam**
Sales Representative
**Cell: 416.319.7507**
Email: ravis319@hotmail.com



**HomeLife/Galaxy**
**Realty Inc., Brokerage***
880 Ellesmere Road, Suite 204, Toronto, ON M1P 2W6
Bus: 416.284.5555

# BUY-SELL & INVEST

**SELVAN SINNATHURAI**
Sales Representative
**647-297-8128**
**www.homelifetoday.com**



HomeLife/Today Realty Ltd., Brokerage* Independently Owned and Operated, Realtor
Bus: (416) 298-3200

# MORTGAGE & LOANS



வீட்டுக்கடன் - மீள்முதலீடு - வணிகக்கடன்
மற்றும் உடனடி அடமானக்கடன்
தேவைகளுக்கும் இன்றே அழையுங்கள்.

Before | **Consolidated** (After)

| Debts | Balance | Payment |
|---|---|---|
| Mortgage | $255,000.00 | $1,150.00 |
| Car loans | $16,000.00 | $350.00 |
| Credit Card(s) | $19,000.00 | $600.00 |
| Personal Loans | $10,000.00 | $250.00 |
| Totoal Loan | $300,000.00 | $2,350 |

**Total Debts $300,000.00**

Current Monthly Payment $2,350

New Monthly Payment $1,357.00

Monthly Savings $993.00

Examples are provided for illustrative purposes only, consult a broker for accurate calculations.
New payments calculated at 2.59% with 25 years amortization.

# SUGANTHAN
# 416.859.2564

OBSIDIAN MORTGAGE CORPORATION
Mortgage Agent Lic # M08010501 | FSCO 10473
35 Grand Marshall Drive, 2nd Floor
Toronto ON M1B 5W9



TDOT
DRIVING SCHOOL
BUS: 416-320-0202
www.tdotdrivingschool.ca
20 NEW DELHI DRIVE, UNIT 77, MARKHAM ONT L3S 0B5
SEKAR KANAMOORTHY (GENERAL MANAGER)
(MTO APPROVED IN-CAR INSTRUCTOR)
CELL: 416-587-5843




Purusoth Ambigapathy
Sales Representative
416.822.8687
realtor.purusoth@gmail.com
HomeLife/Future Realty Inc., Brokerage*
off: 905.201.9977 fax: 905.201.9229
205-7 Eastvale Dr. Markham, ON. L3S 4N8




உங்கள் விருப்பத்திற்கேற்ப
வீடு வாங்க, விற்க
நம்பிக்கையுடன் நாடுங்கள்.
ALL YOUR REAL ESTATE NEEDS
SIVARAJAH
Sales Representative
Cell: 647-885-8189
muthurajahs@gmail.com
Homelife Future Realty Inc Brokerage
Independently Owned and Operated
Office: 905 201 9977 | Fax : 905 201 9229
205 7 Eastvale Dr, Markham, Ontario L3S 4N8




Wish You
HAPPY BIRTH DAY
Vishal Sugan




நந்தா உணவகம்
NANTHA CATERS
Sri Lankan & Indian Food
BEST CATERS IN TOWN
இப்பொழுது 3 இடங்களில்
Catering, Bakery & Take Out
Brimley & Steeles - 4915 Steeles Ave.E | Warden & Finch - 3268 Finch Ave.E
Kippling & Steeles - 5010 Steeles Ave. |
Call 416 NANTHA 1 - 416 626 8421




Paul Healthy Life Clinic
HOMEOPATHY & ACUPUNCTURE
Paul Joseph, B.H.M.S.(India), R.Ac., R.Hom(Canada)
(Bachelor of Homeopathic Medicine and Surgery)
1193 Brimley Road, Scarborough, Ontario M1P 3G5
Tel: 416 438 3939 Cell: 416 986 4903 Fax: 416 438 3909
www.newhealthcare.ca e-mail:drjp63@yahoo.com




Punch Sockalingam
Broker
416-786-2463
416-PUNCH ME
Email : 416punchme@gmail.com
Century 21
Affiliate Realty Inc. Brokerage
Independently Owned And Operated
Tel : 416-290-1200 Fax : 416-290-1900
208-80 Corporate Dr, Toronto, ON. M1H 3G5




நாளை பற்றி கவலையை தவிர்க்க நம்பிக்கையானது காப்புறுதி ஒன்றே!!!
• உங்களுக்கு தேவையான சகல ஆயுட்காப்புறுதி தேவைகளுக்கும்
• கொடிய நோய்களுக்கான காப்புறுதிக்கும்
• 85 வயது வரை மருத்துவப் பரிசோதனை அற்ற காப்புறுதி
• பல், கண், காது, மூன்று உறுப்புகளையும் காப்பதற்கான காப்புறுதி
• உங்கள் பிள்ளைகளின் உயர் கல்விக்காக அரசாங்கம் வழங்கும் Grant $ 9200 வரை பெறுவதற்கும்.
Arun Kulasingam
FINANCIAL ADVISOR
Dir: 416 357 2847
work:416 400 0041
Email: kulasingam33@yahoo.ca
KABIS
KABIS & ASSOCIATES INC.
Canada Life
La Capitale
INDUSTRIAL ALLIANCE
La Capitale
Assumption Life
Foresters
Protect your love ones LIVE INSURANCE



www.gtatorontopropertiesforsale.com
" LIST YOUR HOME WITH PROFESSIONALS & SAVE YOUR TIME & MONEY"
MARKET IS STILL HOT...
NOT MUCH PROPERTIES IN THE MARKET. DON'T WAIT UNTIL THE SUMMER
Flexible commission package available
Nima Hariharan
Sales Representative
647-866-2642
Hariharan Nadarajah
Sales Representative
416-856-4276
2011-2012 PLATINUM CLUB Member
2013 DIAMOND CLUB Member
2014 DIAMOND CLUB Member
2015 DIAMOND CLUB Member
HOMELIFE HIGHER STANDARDS
2013 & 2014 Top 5% GROSS SALES COMMISSION
31 Progress Avenue Unit 210. Toronto
HomeLife Today Realty Ltd., Brokerage
Office: 416.298.3200




BUY - SELL - INVEST
A.Anton Jeeva, FRI
Broker
416-575-5055
RE/MAX
DYNASTY REALTY INC.
Brokerage. Independently Owned and Operated.
8 Shadlock St. Unit #7
Markham ON L3S 3K9
T: 905-471-0002 F: 905-471-7441